பர்மா-மலாய் 0-1-3 இலங்கை-6 சதம்

Tamil Mani Regd No. M. 3384

தமிழ் மணி

சுதந்திரம் எனது பிறப்புரிமை

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

(வாரப் பதிப்பு)

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 3 ஓசை 32 | சென்னை—வெகுதானிய ஆனிமீ 5உ ஞாயிற்றுக்கிழமை (19—6—38) | விலை அரையணா

கோவிந்த தாஸ்

இந்திய சட்டசபை அங்கத்தினரான சேத் கோவிந்த தாஸ். இவர் தீவிர தேசீய வாதி; உத்தம காங்கிரஸ் பக்தர். வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களிடம் நிறைந்த அபிமானம் கொண்டவர். தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று, அங்குள்ள இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நேரில் கண்டு தென்னாப்ரிக்கா சர்க்காருக்கு நல்ல அடி கொடுத்தார். தென்னாப்பிரிக்கா வெள்ளையர் இவர்மீது சீறி விழுந்து, இவரை அவமதித்தனரேனினும், இவர் அந்த சர்க்காரைக் கண்டிப்பதை நிறுத்தவில்லை. ஜான்ஸிபார் இந்தியரின் நிலைமையையும் நேரில் அறிந்து வந்து, ஜான்ஸிபார் கிராம்பைப் பகிஷ்கரிக்க வேண்டுமென [illegible]

அறிவிப்பு.

கீழ்கண்ட ரெயில்வே ஸ்டேஷனிலுள்ள புக் ஸ்டால்களில் "தமிழ்மணி" பெற்றுக் கொள்ளலாம்

சுதேசமித்திரன் புக் ஸ்டால்

கோயம்புத்தூர்
சேலம் மார்க்கட்
திருப்பத்தூர்
திண்டுக்கல்
கும்பகோணம்
பழனி
திருவாரூர்
பல்லடம்
திருச்சி கோட்டை
விழுப்புரம்
விருதுநகர்
திருவண்ணாமலை
மானாமதுரை
தென்காசி

எக்கின் பாத்தம் புக் ஸ்டால்

சென்னை எழும்பூர்
" சென்டரல்
தஞ்சாவூர்
திருச்சினாப்பள்ளி
மதுரை
விழுப்புரம்
அரக்கோணம்
காட்பாடி
ஈரோடு
போத்தனூர்

மானேஜர்,
"தமிழ் மணி"
ஜி. டி. மதராஸ்.

விலையை குறைத்திருப்பதைக் கவனிக்கவும்
மதராஸ் டி. சி. என். கோல்டன் மேட்டல் ஜ்வேல்லரி மார்ட்



2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான கியாட்லாக் இனாம்.

சிறந்த கல் செயின்கள்
அசல் தங்கச் செயின் களைவிட பிரகாசத்திலும் குறைந்ததல்ல. கருக்காது. 2 வருஷ உத்திரவாதம் பலவித கலர் கல்களால் கட்டப்பட்டவை மிகவும் அழகாயிருக்கும்
பெரிய சைஸ் செயின் பெண்டன்ட் உள்பட
முன் விலை ரூ. 9.
குறைந்த விலைரூ. 7.
சிறிய சைஸ் செயின் பெண்டன்ட் உள்பட
முன் விலை ரூ. 7
குறைந்த விலை ரூ 5.
பெரிய சைஸ் செயின் பெண்டன்ட் இல்லாமல்
முன் விலை ரூ. 7.
குறைந்த விலை ரூ. 5.
சிறிய சைஸ் செயின் பெண்டன்ட் இல்லாமல்
முன் விலை ரூ. 5.
குறைந்த விலை ரூ. 3-8-0.
வி. பி. செலவு அ. 8
குறிப்பு:-ஆர்டர் செய்யும் போது தயவு செய்து தமிழ் மணியைக் குறிப்பிடவும்.

டி. சி. நாகலிங்கப்பா அண் கோ.,
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் P. O. மதறாஸ்.
K. W. ஜோசப் ஏஜெண்டு டி. எல். வி. பில்டிங்,
பொள்ளாச்சி. (கோயம்புத்தூர் ஜில்லா)

மிகவும் உயர்ந்த
மிஸ்கி பெருங்காயம்
(டிரேட் மார்க்)
N. K. S.
பஜாரில் நிகரற்ற பெருங்காயம் இதுவே. காரம், மணம், குணம் முதலியவைகளில் சிறந்ததுவும் இதுவே.
ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.
எங்கும் கிடைக்கும்.
நாரன்தாஸ் கேசூர்தாஸ் அன் சன்ஸ்
பெருங்காய வியாபாரிகள்
1-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு ஜி. டி. மதராஸ்
தலைமை ஆபீஸ்: "-வடகாதி "பாம்பே-3
கிளை ஆபீஸ்:—
கும்பகோணம்.

மேகவியாதி
என்னும் விஷப்பாம்பைக் கொன்று தேகாரோக்கியத்தைப் பெற்று இன்பமான இல்லற வாழ்க்கையையனுபவிக்க
பங்காமிருதவடி
என்னும் மருந்து தகுந்த உபாயம்
20 மாத்திரையடங்கிய டப்பி ரூ.1-12
40 " ., ரூ.3-0
மதன மஞ்சரி பார்மஸி,
1-94 சைனாபஜார் ரோட் மதராஸ்.
ஏஜண்டு: - ஜவேரியன் ஸ்டோர்ஸ்,
513 சுலையா தெருவு, பினாங்கு.

50, வருஷங்களாக உலகமேங்கும் பிரசித்தி பெற்ற அநேக போன் வெள்ளி மேடல்கள் பரிசு பெற்றதுமான
A. S. சுகந்த மூக்குத்தூள்
நெ. 1. ஏ. எஸ். அசல் பட்டணம் பொடி
இவை:—காரம், சிறம், குணம், மணம், வாடை ஒருங்கே அமைந்துள்ளன.
எவ்வூரிலும், எக்கடைகளிலும் கிடைக்கும்.
தயாரிப்பவர்கள்:—
ஏ. எஸ். முகம்மது ஷம்சுதீன் சாயபு, &Co.,
தபால் பெட்டி 1201. மதாஸ்

WHITE BROS.,
OPTICIANS,

-9/173, BROADWAY, MADRAS.

கர்ப்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கர்ப்பபை சுத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 வித மலடுதீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

நபருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.
1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்
சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்சு:—146, புரசவாக்கம் ஹைரோடு, சென்னை.

ரஞ்சிதத்தின் வலையில் சிக்கிய கமலத்தை ரங்கன் மீட்டு, அவளைத் தூக்கிக்கொண்டு அரண்மனை நந்தவனத்திலிருந்த அந்த ரங்க அறைக்குக் கொண்டுபோனான், அங்கு அவளுக்கு மயக்கம் தெளியக் கூடிய மருந்தை மூகரக் கொடுத்தான். கமலமும் மயக்கம் தெளிந்து விழித்தாள். எதிரே நின்ற கருஉருவத்தைக் கண்டு திடுக்கிட்டாள். ஆனால், அந்தக் கருஉருவம் அவளுடைய காதலன் ரங்கனெனக் கண்டதும் ஆனந்த பரவசமடைந்தாள். ரங்கன் கமலத்தின் நாணத்தையும், தடுமாற்றத்தையுங்கண்டு உள்ளூரப் பூரிப்படைந்தான். கமலத்திடம் பழைய அன்பு இன்னமும் குடிகொண்டிருக்கிறதாவென்பதை அறிய பல கேள்விகளைக் கேட்டான்.

"கமலம்!" என்றான் ரங்கன். கமலம் பேசவில்லை; அவளுக்கு ஆனந்தம் பொங்கியது.

"கமலா பேசக்கூடாதென்ற விரதமா?"

"உ...ம்...உ...ம்...இல்லை..."

"ஏன் பேசக்கூடாது?"

"என்ன பேசச் சொல்லுகிறீர்கள்?"

"உனக்கு என்னிடமுள்ள அன்பு மாறவில்லையே?"

"இல்லை...எப்படி...மாறிவிடும்?"

"என்னை நேசிக்கிறாய்! முழு மனத்துடன்."

"ஆம்..." என்றாள் கமலம்.

ரங்கன் கமலாவை அன்போடு அரவணைத்து முத்தமிட்டான்.

"நேரமாகிறது...நான்..."

"ஆம், கண்ணே நேரமாகிறது; சீக்கிரம் புறப்படு."

"எனக்கு விடைகொடுங்கள் இப்போ...நமது இன்பம் பெரிதல்ல! முதலில் நமது கடமை..."

"ஆமாம்; கமலா, நல்ல எண்ணத்தை வற்புறுத்தினாய்!" என்ற கமலாவை விடுவித்தான். இருவருமாக ரகசிய அறையிலிருந்து வெளியேறினர். வேகமாக தோட்டத்துக்குள் வந்து அரண்மனையின் வாசலுக்குச் சென்றார்கள். கதவு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு, கமலா அவள் மடியிலிருந்த ஒரு சாவியை எடுத்து மெதுவாகக் கதவைத் திறந்தாள்; ரங்கனிடம் விடை பெற்றுக்கொண்டு அரண்மனைக்குள் சென்றாள். ரங்கன் சிறிது நேரம் அங்கு நின்று கவனித்தான். அப்புறம் மண்டபத்தை நோக்கி நடந்தான். மறு விநாடியில் தோட்டத்திலிருந்து மாயமாக மறைந்துவிட்டான்.

சோக்கநாதன் — தொடர் கதை

வைர வியாபாரம்

(பூ. அ.)

அன்றிரவு வெகு நேரத்திற்குப் பின்படுக்கைக்குச் சென்ற மோகனாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். அவள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினாள். மறு நாள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்; இதுவரையில் அணிந்திராத விலையுயர்ந்த அழகிய ஆடைகளைத் தரித்துக்கொள்ள வேண்டுமென யோசனை போட்டாள். மறுநாள் அரண்மனைக்கு வரப்போகும், மதுரை வைர வியாபாரிக்கு அவள் அழகாகத் தோன்ற வேண்டுமென்ற ஆவல் மோகனாவுக்கு இருந்தது. அதற்காகவே தன்னை என்றுமில்லாதபடி அலங்கரித்துக்கொள்ள மோகனா யோசனை செய்தாள். மறு விநாடியில் அவள் எண்ணம் மாறிவிட்டது. "சீ! எனக்கு ஏன் இந்த ஆடம்பரம்? அவர் ஒரு மதுரை பிரபு...ஒரு வர்த்தகர். அவருக்காக நான் ஏன் அழகாக விளங்க வேண்டும்? அவர் யாரோ! எனக்கும் அவருக்கும் என்னவிருக்கிறது? ஒன்றுமில்லை. என் அத்தான்...சொக்கர்......ஆம்......அவரையே என் மனம் நாடுகிறது. இந்த வைர வியாபாரி யார்?" என வேறொரு எண்ணம் அவள் மனதில் இடித்துக் கூறியது. அவளுக்கு ஏற்பட்ட மனச் சஞ்சலத்தால், அவள் கமலாவைக்கூட நினைக்கவில்லை. அவளுடைய அறைக்கு அழைத்துக்கொள்ளுவதைப் பற்றி அவள் நினைக்கவே இல்லை. இவ்வாறு நெடுநேரம் தூக்கமின்றி ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தாள் ஆனால், இயற்கையை ஜெயித்துவிட முடியுமா? அவள் எண்ணம் சோர்ந்துவிடவே நித்திரையும் மெதுவாக வந்தது. மோகனா தூங்கிவிட்டாள்.

அவள் கனவில்கூட மதுரை வைர வியாபாரிதான்; அவரிடம் முத்து மாலைகள் வாங்குவது போல் கனவு கண்டு திடுக்கிட்டு விழித்தாள். பொழுது புலரும் சமயமாகிவிட்டது. அதற்குமேல் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ஆகவே, மெதுவாகக் கமலாவின் அறையை நோக்கி நடந்தாள்; கமலா அயர்ந்த நித்திரை செய்துகொண்டிருந்தாள். அன்றிரவு அவள் பட்ட அவதியும், கண்ட காட்சிகளும் மோகனாவுக்குத் தெரியாது. மோகனா மெதுவாகக் கதவைத் தட்டினாள்; சப்தமில்லை. சிறிது உரக்கத் தட்டினாள். கமலா திடுக்கிட்டு விழித்தாள். மெதுவாகக் கதவைத் திறந்தாள்.

"கமலா, இன்னமும் தூக்கமா?"

"ஏன்? அதற்குள் விழித்துவிட்டீர்களா? இன்னமும் விடியவில்லையே!"

"ஆம்; எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை; நேரத்துடன் எழுந்துவிட்டேன். உன்னைத் தேடி வந்தேன்!"

"ஏன் தூக்கம் பிடிக்கவில்லை?"

"என்னமோ தூக்கம் பிடிக்கவில்லை; கமலா, உன் தூக்க மயக்கம் இன்னமும் தெளியவில்லையா? சாதாரணமாகச் சிறிது சப்தம் கேட்டாலும் சட்டென எழுந்திருக்கும் நீ, இன்று ஏன் இப்படித் தூங்குகிறாய்?"

"அது என்னமோ, தூக்கம் வந்தது தூங்கினேன். ஆனால், உங்களுக்கு ஏன் தூக்கம் வரவில்லை?"

"ஏனோ?......ஆம்......கமலா....இன்று..."

"காரணம் கூறாமல் ஏதேதோ பேசுகிறீர்கள்!"

"எனக்குத் தெரியாது..."

"உங்களுக்குத் தெரியாதா? நான் கூறட்டுமா?"

"தெரிந்தால் வைத்துக் கொள்...நான்...உன்னிடம்..."

"உங்களிடம் கூறவில்லை. சரி போகட்டும். இன்று மதுரை...பிரபு அந்த வைர வியாபாரி அரண்மனைக்கு வருகிறாரே! அதற்கு..."

"கமலா...விடமாட்டாய் போலிருக்கு! வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறாப்போல்..."

"அம்மா! நான் என்ன சொன்னேன்! இன்றைக்கு நடக்கப் போகும் காரியத்தைப் பற்றிப் பேச்செடுத்தேன். அதைப் பற்றிப் பேசவும் கூடாதா?"

"கமலா, போதும்; நீ லேசான பேர்வழி அல்ல! இன்றைக்கு வைர வியாபாரி வருகிறார்......அதனால்

(அடுத்த பக்கம்பார்க்க)

புகழ் பெற்ற "சவரன் பிராண்ட்"

சுருட்டுகளையே உபயோகியுங்கள்
உங்கள் மனதுக்கு திருப்தியளிக்கும்
உயர்ந்த சுமத்திரா, ஜாவா, திண்டுக்கல் புகையிலையால் தயாரிக்கப்பட்டது

12 ரகம் சவரன் மார்க்கு சுருட்டுகள் அடங்கிய சாம்பில் பெட்டி 1-க்கு விலை அணு 0—1—0
அதை வாங்கி உபயோகித்தபின், உங்களுக்கு எந்த ரகம் பிரியப்படுகிறதோ அதை வாங்கிக்கொள்ளலாம்

தி. ம. மாணிக்கம் பிள்ளை,
சுமத்ரா, ஜாவா, நாட்டுச் சுருட்டு வியாபாரம்
நெ. 60, பந்தர் தெரு, மதராஸ்.

டிராலியின்
கமகமவென * பரிமளிக்கும்
கஸ்தூரி சோப்

தினசரி ஸ்நானம் செய்கையில் கிரமமாக உபயோகித்து வந்தால் தேகம் நறுமணம் கமழும்

இன்றே வாங்கி உபயோகித்து இதன் உயர்ந்த குணங்களை
பரீட்சியுங்கள்

A.V.R.A. அடைக்கப்பச் செட்டியார்,
52, பந்தர் தெரு, மதராஸ் ... பிராஞ்சு:-மதுரை.

வைர வியாபாரம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

எனக்குத் தூக்கம் பிடிக்காமல் உன்னைத் தேடிவந்திருக்கிறேன்...உன் தூக்கத்தையும் கெடுத்து விட்டேன் என்று நேரடியாகச் சொல்லாமல் வளைய வளைய என்ன மெல்லாமோ கூறுகிருய்..."

"அம்மா, மன்னித்துக் கொள்ளுங்கள். நான் கபடின்றிக்..."

"கமலா, மன்னிப்பு என்ன இருக்கிறது? தமாஷாகக் கூறினேன்... வருத்தப் படாதே,"

"எனக்கு வருத்தம் ஒன்றுமில்லை அது போகட்டும்; நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்போம்"

"என்ன காரியம் நடக்க வேண்டி இருக்கிறது?"

"நீங்கள் ஸ்நான காரியங்களை முடித்து, ஆடை யணிந்து தயாராக இருக்க வேண்டிய காரியந்தான். பிரமாதமாக ஒன்றுமில்லை."

"சரி போகலாம்; இருவரும் சிறிது நேரம் நந்தவனத்திற்குச் செல்லுவோம். அதற்குள் பொழுது விடிந்து விடும்..."

மோகனாவும், கமலாவும் நந்தவனத்திற்குச் சென்றார்கள். கமலாவுக்குத் தூக்கம் அப்பொழுது சொக்கியது, கொட்டாவி விட்டுக் கொண்டே இளவரசியைப் பின் தொடர்ந்து சென்றாள்.

இந்நேரத்தில் பாட்டி வீட்டு மாடியிலிருந்த சொக்கநாத நாயக்கர் படுக்கையிலிருந்து எழுந்தார். ரங்கனை அழைத்தார். இருவருமாக ஏதோ சில காரியங்களைப் பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

"ரங்கா, இந்த ஆபரணங்கள் போதுமா? வேண்டியிருந்தால் இன்னமும்..."

"இவை போதும்!...வைர வியாபாரஞ் செய்வதாயிருந்தால்தானே வைரம் அதிகம் வேண்டும்!"

"எனினும், போதிய வைரங்களுடன் போக வேண்டியது நமது கடமையல்லவா? மோகனாவுக்கு இதெல்லாம் தெரியுமா?"

"தெரியாதுதான்! ஆனால்...நம்மிடமிருக்கும் வைர நகைகளே பல லக்ஷம் பெறும்!"!

"ஆம்; அந்த ஆபரணங்களுடன் என் வைர மாலையையும் சேர்த்துக் கொள்."

"ஏன்? அது உங்களுக்குத் தேவை இல்லையோ?"

"தேவையிருந்தாலும், அதையே மோகனாவுக்குக் கொடுக்கப் போகிறேன்!"

"உங்கள் இஷ்டம்; மாறுவேஷத்தில் முன்னெச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நான் கீழே போய் மற்றக் காரியங்களைக் கவனித்து வருகிறேன்" என ரங்கன் மாடியிலிருந்து கீழே சென்றான். அவன் பாட்டியைக் கண்டு பேசினன்.

"பாட்டி, நீ சீக்கிரம் அரண்மனைக்குப் போ..."

"உங்களுக்கு ஆகாரம் தயாரித்துக்கொடுத்துவிட்டுப் போய் விடுகிறேன். மற்றக் காரியங்களெல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா?"

"எங்களைப் பொறுத்த வரையில் தயார்; அரண்மனை ஏற்பாடுதான் தெரியவில்லை."

"கமலம் பலே ஆசாமி! அவள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுவாள். 10 மணிக்குத்தானே அரண்மனைக்குப் புறப்படுகிறீர்கள்?"

"ஆமாம், அதற்கு எவ்வளவோ நேரமிருக்கிறது இளவரசருக்கு அதற்குள் ஆத்திரம்!"

"ஆமாம்...ஆத்திரமில்லாமலிருக்குமா?..." என்று சிரித்துக்கொண்டே பாட்டி கூறினள். ஜரூராக வேலைகளை முடித்துவிட்டு அரண்மனைக்குச் சென்றாள். இதற்குள் மோகனாவும், கமலாவும் தோட்டத்திலிருந்து அரண்மனைக்கு திரும்பினார்கள். பாட்டியைக் கண்டதும் மோகனா புன்னகை செய்தாள்.

"பாட்டி என்ன விசேஷம்? நேரத்தோடு வந்து விட்டாயே?"

"விசேஷம் என்னமோ உனக்குத் தெரியும்! உன் முகத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?"

"கமலா, பார்த்தாயா, பாட்டியின் குறும்புத்தனத்தை!"

"பாட்டி உள்ளதையே கூறுகிருள்!" என்றாள் கமலம்.

"நீயும் பாட்டியுடன் சேர்ந்து கொண்டாயா?"

"போகட்டும்; பாட்டியம்மா, இளவரசிக்குச் செய்யவேண்டிய வேலைகளைக் கவனித்துக்கொள்; அழகான சடை போடு. அதிக அழகான விலையுயர்ந்த பட்டுப் புடவையைக் கட்டு!"

"அப்புறம், கமலா! இன்னும் என்ன செய்யவேண்டும்? அவ்வளவுதானா?..." என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் மோகனா.

"அது பாட்டியம்மாவுக்குத் தெரியும்; எனக்கு ஒன்றும் தெரியாது"

மோகனா நகைத்தாள். கமலாவின் சிரித்த முகத்தைக் கண்டு அவளுக்கு ஆனந்தம் பொங்கியது.

"பாட்டியம்மா, இளவரசிக்குச் செய்யவேண்டிய வேலைகளை முடித்தபின் என் அறைக்கு வா" என்று கூறிவிட்டு, கமலா மோகனா அறையிலிருந்து வெளியேறினாள். வழியில் ரஞ்சிதம் சட்டெனத் திரும்புவதைக் கண்டு கமலம் திடுக்கிட்டுப் போனாள்.

(தொடரும்)

ஷாங்ஹாயில் ஒரு நாள் பகல் 100 டிகிரி உஷ்ணமிருந்து கொண்டிருந்தது. அந்நேரத்தில் திடீரெனப் பனி பெய்தது பலருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

எல்லா பெருங்காயத்திலும் மேலானது

எல். ஜி. பெருங்காயம்

இதுதான் உண்மையான மிஸ்கி பெருங்காயம்.

போலிச் சரக்குகளை கண்டு ஏமாற வேண்டாமென்று வாசகர்களை எச்சரிக்கிறோம்.

எல். ஜி. மிஸ்கி பெருங்காயமானது மனோரம்யமான மணமும், இன்பமான ருசியும், குறைவில்லாத குணமும் கொடுக்குமென்பது நிச்சயம்.

நீங்கள் பெருங்காயம் வாங்கும்பொழுது எல். ஜி. மார்க்கை குறிப்பிட்டு கேளுங்கள்.

லால்ஜி கோது அன் கோ,

சௌகார் பேட்டை, மதராஸ்.

சுருட்டுகளில் இவைகளைவிட மேலானது வேறில்லை

—: அகிலம் புகழும் :—

ஸ்ரீ அம்பாள்

பட்டணம் பொடி

சென்னையில் பொடித் தொழிற்சாலையில் மிகப் பெரியதும், மூதன்மை பெற்றதும், முன்னணியில் நிற்பதும், அநேக ஆண்டுகளாக கற்பியாதி பெற்றதுமான ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட அம்பாள் பொடியையே உபயோகியுங்கள். காரம், மணம், குணத்தில் மிகசிறந்தது. நாசிக்கு சுகத்தையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுக்கக் கூடியது.

ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, தபால் பெட்டி நெ. 8, மதராஸ்.

ஐ ம் ப ம் சா ய ா து !



சீன, ஜெனர... , ஷியாங்-கே-ஷேக்.

சீனாவின் ஜனத்தொகை சுமார் 42 கோடி. அதில் 5 கோடி சீனர் முஸ்லிம்கள். இந்த முஸ்லிம்களைப் பிரித்துச் சீனாவைப் பிளவுபடுத்த ஜப்பானியர் சில வருடங்களாக முயற்சித்து வந்தார்கள். அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. அதன்பின், இப்பொழுது அதி தீவிரமாக யுத்தம் நடந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில்கூட, ஜப்பானியர் தீவிரமாக விஷமம் செய்து வருகிறார்கள். சீன முஸ்லிம்கள் அனை... சுத்த வீரர். அவர்கள் ... சீனாதான். ... புற ... சீன ...

ஜப்பான் குட்டிக்கரணம் :: :: சீனாவைப் பாருங்கள்

இந்தியாவிலிருப்பதுபோலவே, சீனாவிலும் சுமார் 5 கோடி சீன முஸ்லிம்களிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த தேச பக்தர். ஜப்பானைத் தோற்கடிக்க சீன மக்களோடு தோள்பொருத்திச் சண்டை செய்து வருகிறார்கள். சீன முஸ்லிம்களைப் பிரித்து, சீனாவில் பிளவை உண்டுபண்ண ஜப்பானியர் எவ்வளவோ முயற்சித்துப்பார்த்தார்கள். அவர்கள் ஜம்பம் சாயவில்லை.

யுத்த களத்துக்குப் புறப்படத் தயாராக இருக்கும் யௌவன சீனர்கள். இவர்களில் சீன முஸ்லிம்களும் கலந்திருக்கின்றனர்.

சீனரையும் பிரித்து வைக்க ஜப்பானியர் சூழ்ச்சி செய்துவந்தார்கள். மங்கோலியரையும், மஞ்சூகோ சீனரையும் ஜப்பானியர் வசப்படுத்தினார்கள். ஆனால், முஸ்லிம்களை அவர்களால் வசப்படுத்த முடியவில்லை. ஆகவே, அவர்கள் கொரியாவிலுள்ளவர்களையும், மங்... லியர் சிலரையும் வடமேற்குச் ...க்கு அனுப்பி, அங்குள்ள ...ளைக் கலைத்துவிட முயற் ... துவும் பலிக்கவில்லை ... சீன சர்க்கா... போல் ராஜ... ர்களா. இப் ... வருகிறார்கள். ... பலிக்காது ... இதர கிழ... ல், சீன ... ரசாரஞ் ... ம்கள், ... ந்து, ... தை ... ரித் ... .

முஸ்லிம்கள் யுத்த களத்துக்குச் சென்றிருக்கின்றனர். இன்னம் பல லக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் யுத்த களஞ் செல்லத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சீன ஜெனரல், ஷியாங்-கே-ஷேக்கிடம் அவர்களுக்குள்ளநம்பிக்கையும், பக்தியையும் அசைக்க முடியாது. அவரிடம் அவர்களுக்குள்ள நம்பிக்கையை அவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டார்கள். "சமாதானம், நீதி, அமைதி, முதலிய உத்தம லட்சணங்களைக் கொண்டது இஸ்லாம். இந்த லட்சணங்களைச் சீரழிக்கப் பிறர் தலையிடுவார்களேயானால், அதை முஸ்லிம்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். சீன முஸ்லிம்களின் சுதந்திரத்துக்கும், உரிமைக்கும், சமாதானத்துக்கும் ஜப்பானியர் எதிராகப் படையெடுத்து வந்திருக்கின்றனர். அவர்களை எதிர்த்து முறியடிக்க வேண்டியது, சீன முஸ்லிம்களின் கடமையாகுமென்பதை சகல சீனமுஸ்லிம் மக்களும் உணர்ந்திருக்கிறார்கள். சீன முஸ்லிம் மக்கள் அந்தக் கடமையை நிறைவேற்றியே தீருவார்கள்" என சீன முஸ்லிம் தலைவர்கள், ஷியாங்-கே-ஷேக்குக்கு அறிவித்திருக்கின்றனர்.

ஜப்பானியர் அக்கிரமம்

மதத்துக்கு, ஆபத்து, இஸ்லாத்துக்கு ஆபத்து எனத் தூண்டிவிடும் ஜப்பானியர், அவர்கள் ஆட்சிக்குட்பட்ட மஞ்சூகோவில், முஸ்லிம்களுக்கு மத சுதந்திரம் கொடுத்திருக்கிறார்களா? இல்லை. அங்கு பல மசூதிகளை இடித்தும், மத சுதந்திரத்தில் தலையிட்டும் வருகிறார்கள். முஸ்லிம்கள் பிரார்த்தனையில்கூட ஜப்பானியர் தலையிடுகிறார்களென்றால், அவர்களின் அட்டூழியங்களைப் பற்றி என்ன சொல்லுவது? ... முஸ்லிம்கள் இதை அறிந்தே, ...வின் பொது எதிரியான ஜப்பானியரை எதிர்த்து முறியடிக்கக் கங்கணம் கட்டியிருக்கிறார்கள். அதற்காக எந்தவிதமான தியாகஞ் செய்யவும் அவர்கள் தயார்.

யுத்த பழக்கம்

சீனாவிலுள்ள பெரும்பான்மையான முஸ்லிம்களுக்குப் போதிய கல்வி கிடையாது. ஆகவே, அவர்கள் ஏராளமாக ராணுவத்தில் சேரவில்லை. இப்பொழுது அவர்களுக்கு

(அடுத்த பக்கம் பார்க்க)

சீனாவில் ஏழைச் சிறுவர் சிறுமியர் படும் பாடு. ஜப்பான் சோல்ஜர்கள் சிற்சில இடங்களில் அடித்து நிர்ப்பந்தப் படுத்துகின்றனர் ஜப்பானியர் சீனச் சிறுவர்கள், சீன-முஸ்லிம் சிறுவர்களென்ற வித்தியாசம் பார்க்கவில்லை.

ஜம்பம் சாயாது!

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஊக்க மூட்டி, கல்வி அறிவு கொடுத்து வருவதோடு, அங்க முஸ்லிம்களை ஏராளமாக ராணுவங்களில் சேர்த்து, ராணுவ பயிற்சி கொடுத்து வருகிறார்கள். பல ஆபிரக்கணக்கான படித்த முஸ்லிம் வாலிபர்களுக்கு நல்ல ராணுவப் பழக்கங் கொடுத்து, பல ராணுவங்களில் உத்தியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறார்கள். வட மேற்குச் சீனவிலுள்ள பல ராணுவங்களில் இந்த சீன முஸ்லிம் வாலிபர் பலரைக் காணலாம். வாலிபர்களின் முயற்சியாலும், சீன முஸ்லிம் தலைவர் பிரசாரத்தாலும், சீனவிலுள்ள 5 கோடி முஸ்லிம் மக்களும், அவர்கள் தாய் நாட்டுக்காக அவர்களுடைய கடைசித் துளி இரத்தத்தையுஞ் சிந்தத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சீனர் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஜப்பானியரை முறியடித்து ஜெயக் கொடி நாட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை. சீனவின் ஒற்றுமையே அதற்குப் போதிய சான்றாகும். சீன முஸ்லிம் மக்களின் தேச பக்தியும், வீரமும், தாய் நாடுமீது அவர்கள் கொண்டிருக்கும் இணையற்ற அன்பும், இந்திய முஸ்லிம் மக்களுக்கு ஒரு சரியான பாடமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

சீனவில், ஜப்பான் வெடி குண்டுகளுக்கு இரையான சீனர்கள். அட்டூழியங்களைக் கண்ணுறக் கண்ட சீனப் பெண்கள் பலர் துப்பாக்கி சகிதம் யுத்த காலத்துக்குப் புறப்பட்டுப் போகின்றனர்.

ரூபாய் 50

வருமானம்

மாதம் ரூ. 50-0-0 சம்பளம்பெற இஷ்டமுடையவர்கள் எங்களிடமிருக்கிற மோட்டார் மானுவல் என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள் மோட்டார் ஓட்டவும், மோட்டார் பாகங்களை கழற்றவும், மற்றும் மோட்டார் சம்பந்தமான வேலைகளைக் கற்றுக்கொள்ளக் கூடியதுமான தமிழ் புத்தகம். 50படங்களோடு, கூடியது 200 பக்கங்கள் விலை ரூ. 2-0-0 புத்தகம் வேண்டியவர்கள் ரூ 2-6-0 முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர்

"தமிழ் மணி"

பழ.மு.முத்தையாசெட்டியார் & ஸன்ஸ்.
ஸ்தாபிதம் 1885
இரும்புபெட்டிகள்
பீரோக்கள்
கவரன்மெண்ட் சப்ளையர்ஸ்.
பிராஞ்ச் ... பிராட்வே
ஹெட்ஆபிஸ்
வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

விற்பனைக்குத் தயார்

"தமிழ்மணி"யின் இரண்டாம் வருட பைண்ட் வால்யூம் தயாராகி விட்டது. ... சொற்பப் பிரதிகளே ... வசமிருக்கின்றன.

விலை ரூ 2-8 தபால் சிலவு அ. 8

மானேஜர்:—"தமிழ் மணி"

கப்பல் மார்க்கு
ரெங்கோன் வைரங்கள்
நகைகள்
சமசுதீன் & இசுமாயில்
96, தங்கசாலை ...தெரு, ... மதராஸ்.
சௌகார்பேட்டை,
கேட்லாக் இனம்

கரடி ஓநாய் சண்டை புலி முதலை சண்டை கார்லான் சிங்கம் சண்டை

தத்ரூபம்

காட்டு மனிதன் கார்லான் கையில் சிக்கிய மங்கை படும்பாடு பார்க்க விரோதம்

மோத்தி என்ற நாயின் சமர்த்தைப் பார்த்து 'ஆஹா' என்று ஆச்சரியப்படுவீர்கள்

திடுக்கிடும் சம்பவங்கள் நிறை...

வனராஜ கா...

என்ற முதல் தமிழ்ப் பேசும் ...

சென்னை கிரௌன் டாக்கிஸ், கா...

- - 3-வது வா...

- மதுரை நியூ சினிப...

காஞ்சீவரம்-கண்ணன் டாக்கீஸ் 18-6-38

விரைவில் வருகிறது:-கடலூர் ஸ்ரீதரன் டாக்கிஸ்...

முழு உரிமை...

மதருஸ் யுனைடெட் ...

7, பெல்ஸ் ரோடு, ...

கிளிப்பேச்சு

அற்பனுக்குப் பவிசு வந்தால்?

அவா நக்கு இவாள்! :: ::

:: மந்திரிகளுக்குச் சனிதிசை

வடக்கே ஹம்பக், தெற்கே திருகுதாளம்

ஊமையன் கூட்டத்தில் உளறுவாயன்

கிளியே, இந்திய அரசியல் நிலைமை எப்படியிருக்கிறது? முக்கிய விசேஷங்கள் உண்டா?

ஆமாம், உண்டு; இந்திய அரசியல் நிலைமையை கருமேகம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. பம்பாயில், காந்திஜிக்கும், ஜின்னாவுக்கும்; அதன் பின் ஜின்னாவுக்கும், ராஷ்ட்ரபதி சுபாஷ் பாபுவுக்கும் நடந்த ஹிந்து-முஸ்லிம் சமரசப் பேச்சால் ஏதேனும் நன்மை ஏற்படலாமென்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள் எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது. சமரசத்துக்கே இடமில்லாது போயிற்று. இதற்கு முக்கிய காரணம் முகமதலீ ஜின்னாதான். அவருடைய சகாக்களான முஸ்லிம் லீக் நிர்வாகக் கமிட்டியாரும் அவருக்கு ஒத்து ஊதிக்கொண்டிருக்கிறார்கள். ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்கே இடமில்லாமல் செய்துவிட்டார்கள். ஹிந்து-முஸ்லிம் சமரசத்தில் அவர்களுக்கு உண்மையான அக்கரை இருந்தால்லவோ அவர்கள் திரிகரண சுத்தியாக அதற்க கஷ்டப்படுவார்கள். ஹிந்து-முஸ்லிம் சமரசம் ஏற்பட்டுவிட்டால், ஜின்னா போன்றவர்களுக்கும், ஹக், ஹயாத்கான் போன்றவர்களுக்கும் தலைவர் பதவி எப்படிக் கிடைக்கும்? அவர்கள் வெறும் ஜின்னாக்களாகவும், ஹக்குகளாகவும் மூலையில் குந்தியிருக்க வேண்டி வராதா? அதற்காகவே அவர்கள் ஹிந்து-முஸ்லிம் சமரசத்தில் மிகப பிடிவாதமாயிருக்கிறார்கள். சென்ற வாரம் லீக் நிர்வாகக் கமிட்டி தீர்மானத்தைப் பற்றியும், ஜின்னாவின் அகம்பாவமான பேச்சைப் பற்றியும் கூறியிருந்தேன். அதைவிட ஜின்னா இப்பொழுது முழுமோசமாக நடந்துகொண்டிருக்கிறார்.

அப்படி என்ன நடந்தது?

பிரமாதமாக எதுவும் நடந்துவிடவில்லை. ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்காகக் காங்கிரஸ்காரர் விசேஷமாகக் காந்திஜி ஜின்னா காலில் விழுந்துகிடக்கிறாரென்று, கான்பகதூர் சாஹிப், ராமசாமி நாயக்கர் போன்ற தென்னாட்டு மண்டுகளும். வடநாட்டில் சிலரும் அடிக்கடி இழிவாகப் பேசி வந்தது ஞாபகமிருக்கலாம். ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்காக, காந்திஜி யார் காலிலும் விழத்தயார். இதில் இழிவோ, கேவலமோ இல்லை. ஆனால், ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்குக் காந்திஜியை வலிய அழைத்தவர் ஜின்னாவென்பது இப்பொழுது தெரிகிறது. இந்த உண்மையை மௌலானா அபுல்கலாம் அஸாத் ஏற்கனவே கூறியபோது ஜின்னா அவர்மீது சீறிவிழுந்தார். அது போகட்டும்; ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்காகக் காந்திஜியின் உதவியை நாடிய ஜின்னா, அந்த சமரசஞ்செய்துகொள்ள ஒருப்பட்டாரா? இல்லை. காந்திஜியிடமும், ஜவார்லாலிடமும், ராஷ்ட்ரபதி சுபாஷ் பாபுவிடமும் பகா மமதையுடன் நடந்துகொண்டார். ஹிந்து-முஸ்லிம் சமரசப் பேச்சு முற்றுப் பெறுமுன்னே, ஜின்னா ஒரு விளையாட்டுப் பிள்ளைமாதிரி காங்கிரசையும் அதின் கொள்கையையும் பம்பாயில் தாக்கிப் பேசினார் அவர் போக்கைக் கண்டவர்களுக்கு ஜின்னா வழிக்குவர மாட்டாரென்பது தெரிந்துவிட்டது. ஆகவே, சிலர், பண்டித ஜவார்லால், ஜின்னா முதலியவர்களின் அனுமதியைக் கேட்காமலேயே, ஜவார்லாலுக்கும், ஜின்னாவுக்கும் இது சம்பந்தமாக நடந்து வந்த கடிதப் போக்குவரத்துக்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்து விட்டனர்.

அப்படியா? அந்தக் கடிதங்களில் முக்கியமான விஷயங்கள் ஏதேனும் வெளியானதோ?

அநேக விசேஷங்கள் வெளியாயின. ஹிந்து-முஸ்லிம் சமரசத்துக்கு விட்டுக்கொடாமல், ஆதியிலிருந்தே மூர்க்கத்தனமாகப் பிடிவாதஞ் செய்து வருகிறவர் ஜின்னாதான் என்பது வெளியாயிற்று. பண்டித ஜவார்லால், ஜின்னாவுடைய கோரிக்கைகள்தான் என்னவென்று எத்தனை முறை கேட்டாலும், ஜின்னா எழுத்தளவில் பிடிகொடுக்கப் பயந்து மழுப்பிக்கொண்டே போனார். மனதில் உள்ளதையும் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணியவில்லை. ஜின்னாவுடன் கடிதப் பேச்சுவார்த்து செய்வதால் பயனில்லை என்று பண்டிதருக்குக்கூட வெறுப்புத் தட்டிவிட்டது. ஜின்னா அவருடைய வக்கீல் திறமைகளையெல்லாம் அவருடைய கடிதங்களில் காட்டியிருக்கிறார். ஜின்னா-ஜவார்லால் கடிதங்களை ஊன்றிப் படிப்போருக்கு, ஜின்னாவின் மனக்கலக்கமும், திருட்டுத்தனமான வாதமும் நன்கு தெளிவாகும் ஜின்னா பணக்கார முஸ்லிம்கள் நலனிலும் அவர் தலைவர் பதவியிலுமே கண்ணாயிருக்கிறார். ஜவார்லால் ஏழை முஸ்லிம் மக்கள், கதி என்னவாகிறது என்று இடித்துக் கேட்டும் ஜின்னா அதற்குச் சரியான பதில் கொடுக்காமல் மழுப்பிக்கொண்டே போயிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில், இக்கடிதங்கள் வெளியானது துரதிர்ஷ்டவசமேயாகும். ஆனால், இந்த விஷமத்துக்குக் காரணம் யாரென்பது தெரியவில்லை.

விஷமமோ, இல்லையோ, பல உண்மைகள் வெளிவந்து விட்டன. அதனால் தேசத்துக்கு நன்மைதான் ஹிந்து முஸ்லிம் சமரசத்துக்கு முட்டுக் கட்டையாயிருப்பது யாரென்பதை இந்திய மக்கள் நன்கு அறிந்து கொண்டார்கள்.

உண்மையில் நன்மைதான். ஜின்னா போன்ற முஸ்லிம் லீக் தலைவர்களின் போலி வேஷம் வெளிவந்து விட்டது! இந்தக் கடிதங்கள் திடீரென வெளியானது, ஜின்னாவைத் தூக்கி வாரிப் போட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை. அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. உடனே, காந்திஜிக்கும், ஜின்னாவுக்கும் நடந்த கடிதத் தந்திப் போக்கு வரத்துக்களை வெளியாக்கக் காந்திஜியின் அனுமதி கோரி ஜின்னா தந்தியடித்தார் அப்படியே பிரசுரஞ் செய்யலாமெனக் காந்திஜி பதில் கொடுத்து விட்டார். அந்தக் கடிதங்களும் வெளியாகி விட்டன. அந்தக் கடிதங்களின் போக்கைக் கவனித்தால் ஜின்னா காந்திஜியிடம் இன்னமும் முழுமோசமாக நடந்து கொண்டிருக்கிறாரென்பது வெளியாகிறது. ஜவார்லாலிடமோ, காந்திஜியிடமோ, அவர் கொஞ்சமாவது மரியாதையுடனே, அல்லது, ஹிந்து-முஸ்லிம் சமரச சம்பந்தமாகக் கடுகளவு நல்லெண்ணத்துடனோ கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. தாமே 9 கோடி முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி, சர்வம் ஜகத்மயம் என்ற மமதையுடன் கடிதங்கள் எழுதியிருக்கிறார். காந்திஜி எவ்வளவு தாழ்மையாக ஜின்னாவுக்குக் கடிதம் எழுதினாரோ, அதற்கு நேர்மாறாக ஜின்னா, காந்திஜிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். காந்திஜி ஜின்னாவை வார்தாவில் கண்டுபேச விரும்பினார். காந்திஜியின் உடல்

(அடுத்த பக்கம்பார்க்க)



லீகே முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி சபையென்ற முஸ்லிம் லீக் நிர்வாகக் கமிட்டித் தீர்மானத்துக்குக் காரண பூதர்களாயிருந்த மற்றொரு மும்மூர்த்திகள் மத்தியிலிருப்பவர் இந்திய சட்டசபை அங்கத்தினரான சௌத்ரி கலிக்குஜமான்; வலதுபுறமிருப்பவர் அப்துல் ரஹ்மான் சித்திக். இவர்களைப் பம்பாயில் வரவேற்று உபசரித்தவர், இடதுபுறமிருக்கும், சர். அலி முகமதுகான் தெலாவி.

—: கிளிப்பேச்சு :—

(முன் கிக்கத் தொடர்ச்சி)

லேயே அதற்குக் காரணம். உலக சிரேஷ்டர் காந்திமகானே ஜின்னுவைச் சென்று சந்தித்துப் பேசுவதில் ஜின்னு கிரீடம் இறங்கிவிடாது. அல்லது, அவருக்கு இழிவு ஏற்பட்டு விடாது. அதற்கு மாறாக ஜின்னுவுக்குப் பெருமைதான். ஆனால் ஜின்னுவோ தம்மைப் பார்க்கக் காந்திஜி பம்பாய்க்கு வரவேண்டுமென்று அழைத்தார். இதிலிருந்து ஜின்னுவின் அற்பத்தனமான போக்கை அறிந்துகொள்ளலாம். காந்திஜி, ஜின்னுவைப் பம்பாயில் பார்க்க ஒப்புக்கொண்டு அங்கே ஜின்னுவிடம் வலியச் சென்றார் இது காந்திஜி பெருந்தன்மையான குணத்தை ஆயிரம் மடங்கு பிரகாசிக்கச் செய்கிறது ஜின்னுவுக்கே சிறுமை யென்பதில் சந்தேகமில்லை. காந்திஜி தம்மைப் பார்க்க வந்தார் என்று ஜின்னு இறுமாப்புக்கொள்ளலாம் ஆனல், அந்த இறுமாப்பு அழியும் காலம் நெடுந்தூரத்திலில்லை என்றே நினைக்கிறேன்.

ஜின்னு அவ்வளவு மோசமாக போய்விட்டாரா? மெய்தான்; ஜின்னுவுக்கு இயற்கையிலே இந்த வீண் டாம்பீகம் உண்டு.

அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த இராத்திரியில் குடைபிடிப்பானென்று ஒரு கதை சொல்லுவார்கள். ஜின்னுவை முஸ்லிம் லீக்காரர் தூக்கி தலைமேல் வைக்கவே, ஜின்னுவின் தலையும் புரண்டுவிட்டது. அது மட்டுமா? மற்றொரு உத்தமமான முஸ்லிம் தலைவராகிய அபுல் கலாம் அஸாத்தைக் காந்திஜியுடன் அழைத்துவர அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மௌலானு அபுல் கலாம் அஸாத், ஜின்னுவுக்கு எந்த விதத்தில் குறைந்தவர்? அந்தஸ்திலா, அறிவிலா, அல்லது செல்வத்திலா? அன்றி, ஜின்னுவைப்போல் மௌலானு அஸாத்தும் முஸ்லிம் தலைவர் இல்லையா? முஸ்லீம்களிடம் அவருக்கு செல்வாக்கில்லையென்பது ஜின்னு அபிப்பிராயமா? ஜின்னுவைவிட மௌலானு அஸாத்துக்கு ஏழை முஸ்லிம்களிடம் அளவு கடந்த அபிமானமுண்டு. அஸாத் பறந்த நோக்கமுடைய ஒரு உயர்ந்த அரசியல் வாதி. அவருடன் காந்திஜியைக் காண ஜின்னு விரும்பாதது வியப்பாகவே இருக்கிறது காந்திஜியுடன், மௌலானு அஸாத்தும் கூட இருந்தால் ஜின்னு சூட்டு வெளியாகிவிடுமென்ற பயத்தால் அவர் மௌலானு வரவை விரும்பவில்லை போலும்!

ஹிந்து-முஸ்லிம் சமரசம் குதிரை கொம்புதான் என்ற சந்தேகம் எனக்கு ஆதி முதல் உண்டு. சரி போகட்டும்; வேறு விசேஷங்கள் உண்டா?

உங்களுக்கிருந்த அதே சந்தேகம் எனக்கும் உண்டு. சமரசப் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது தர்ச் சகுனம்போல் சமரசம் ஏற்படாது என்று கூற எனக்கு மனம் வரவில்லை. அதனுல்தான் அதை மறைத்து வந்தேன். ஜின்னுவின் மமதை அடங்கி, அவர் மனம் மாறி சமரசத்துக்கு மெய்யாக மனமுவந்து வந்தாலொழிய, ஹிந்து முஸ்லிம் சமரசம் ஏற்படுவது துர்லபமே. ஜின்னு, ஹக், ஹயத் கான்கள் ஹிந்து-முஸ்லிம் சமரசஞ் செய்து வைப்பார்களென்று முஸ்லிம் மக்கள் கனவில்கூட நினைக்க வேண்டாம். இவாளுக்கு அவாள் எழுந்திருந்து உண்பாள்! ஹக்கும், ஹயத்கானும், ஜின்னுவுக்கு இளைத்தவர்களல்ல. ஆகவே, தேசிய நோக்கங்கொண்ட முஸ்லிம் தலைவர்கள் ஹிந்து முஸ்லிம் சமரசத்துக்காக வேலை செய்ய முன்வரவேண்டும். இன்றேல் ஹிந்து-முஸ்லிம் சமரசம் ஊமையன் கண்ட கனவாகிவிடும். முஸ்லிம் லீக்கின் போக்கும் அதிகப்பிரசங்கித்தனமாகிவிடும். உதாரணமாக, வங்காளத்தின் வடபகுதியில் காங்கிரஸ் தலைவர் சுபாஷ் பாபு யாத்திரைசெய்து வந்தார். திப்பரையில் ராஷ்ட்ரபதியை ஹிந்துக்களும், முஸ்லிம்களும் பல ஆயிரக்கணக்கில் திரண்டு சிறப்பாக வரவேற்றனர். அவருக்கு அங்கு நடந்த சிறப்பான வரவேற்பைக் கண்டு லீக் முஸ்லிம்களுக்கு வயிற்றெரிச்சல். லீக் காலிகள் கல்லையும், கட்டைகளையும் எடுத்து எறிந்ததால் ராஷ்ட்ரபதிக்குக் காயம். அவருடன் சென்ற இதர சில முஸ்லிம் தலைவர்களுக்கும் காயம். இதுதான் லீக்காரர் கோரும் ஹிந்து-முஸ்லிம் சமரசம்! ஆத்தான இந்த நிலைமையை உணர்ந்து, தேசிய முஸ்லிம்கள் லீகின் கொட்டத்தை மட்டுப்படுத்த முன்வரவேண்டும். முஸ்லிம் மக்களிடையே தீவிர பிரசாரஞ் செய்து, முஸ்லிம்களிடையே தேசிய நோக்கத்தைப் பரப்பினால் லீகின் கொட்டம் தானாகவே அடங்கிவிடும். தேர்தல் வாருமுன்பு, நாடுவாருமுன்பு தானாகவே அழிந்துவிடும். இன்றேல், பணக்கார முஸ்லிம்களும், சர்க்காரும், பதவிதாரர்களும் அதைக் கட்டிக்கொண்டு அழவேண்டியதுதான்.

வேறு விசேஷம் ஏதேனும் உண்டா?

வங்க ஹக் மந்திரிசபைக்குச் சனிதிசை ஆரம்பித்து விட்டது அந்த மந்திரி சபையில், சுகாதார, ஸ்தல ஸ்தாபன மந்திரியாயிருந்த மௌலவி நாஷிரா உண்டையன் பிரஜா கட்சி மெம்பர். ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர். பஸ்லுல் ஹக்கின் பட்டியை அடிக்கடி கண்டித்து வந்தார். ஆகவே, ஹக்குக்கு மௌலவிநாஷிரா பெரிய முட்டுக்கட்டையாயிருந்தார். சர்க்காரில் பெரிய உத்தியோகம் தேடிக்கொடுப்பதாகவும், மந்திரி பதவியை ராஜினாமா செய்யும்படியும் ஹக் மௌலவி நாஷிராவுக்கு எழுதினர். ஹக் கட்டிய பொன்மானில மௌலவிநாஷிரா மயங்கவில்லை. அவர் மந்திரி பதவியை ராஜினாமா செய்ய மறுத்து விட்டார். ஆகவே, ஹக் மந்திரி சபை ராஜினாமா செய்து நாஷிராவை ஒழிக்கத் தீர்மானித்துவிட்டது. வங்க மந்திரி சபையின் அலங்கோலம் இந்த நிலைமையிலிருக்கிறது. அந்த மந்திரி சபைக்குப் பிடித்த சனிகாலம் இனிமேல் அதை தொடர்ந்து கொண்டேயிருக்குமென்பதற்குக்கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம்.

ஹக் மந்திரி சபைக்கு இனிமேல் கேடுகாலந்தான்! தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு விசேஷமும் இல்லையா?

வடக்கே ஹக் "ஹம்பக்"குக்குத் தெற்கேயுள்ள சில தென்னுலிராமன்கள் திருகு தாளம் சப்பட்டையல்ல. தெற்குத் தென்னுலி ராமன்கள் பலர். மாஜி "பினுமி" மந்திரி சர் பன்னீர் செல்வம் சென்னை அசெம்பிளியில் புலிபோல் பாய்ந்து பூனைபோல் ஒடுங்குபவர். அசெம்பிளியில் இவரைச் சிரிப்பாக சிரித்ததால் முகங்கருத்த பேர்வழி! இவர் சமீபத்தில் விருதுநகர் சு. ம. தமிழர்முதலாவது மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார்.

சற்றுப் பொறு; ஒரு சந்தேகம். தமிழ் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இவருக்கு என்னயோக்யதை உண்டு?

ஆமாம்! அதைக் கண்டு சந்தி சிரிக்கிறது. அவருக்குத் தமிழ் சுட்டுப் போட்டாலும் வராது. அப்பேர்ப்பட்டவர் தமிழ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து ஹிந்தியைக் கண்டித்தார். எல்லாம் பார்ப்பனீயம் என்று ஓலமிட்டார். ஜஸ்டிஸ் கட்சி செத்துப் போயிற்றேயென்று ஒரு மணி நேரம் ஓரே ஓப்பாரிவைத்தார். ஜஸ்டிஸ் தலைவர்கள் ஒழிந்துவிட்டார்களேயென்று லபோ லபோவென்று வாயில் அடித்துக் கொண்டார். ஆனல், சர். பன்னீர் செல்வம் அவருடைய நிலைமையை மறந்து விட்டார் சென்ற தேர்தலில், கிறிஸ்துமதக் குருக்களின் ஆதரவு சர் பன்னீர் செல்வத்துக்கு இல்லாதிருக்கும் பட்சத்தில் இவரும் அவர்களுடன் இருக்குமிடம் தெரியாமல் ஓடி ஒழிந்திருப்பது நிச்சயம். ஏதோ அவருடைய நல்ல காலம், இன்னமும் ஜஸ்டிஸ் கட்சியில் வாலாட்டிக் கொண்டிருக்கிறார்.

உண்மைதான்; சு. ம. தமிழ் மகா நாட்டில் அவர் என்னசொன்னர்?

மகாத் திமிருடன் பெரிய, சரித்திர ஆராய்ச்சிக்காரர்போல் பேசினர். தமிழைக் கரைத்து குடித்தமாதிரி என்னமெல்லாமோ உளறினர். டாக்டர். சுப்பராயன்மீது பாய்ந்தார். அவர் தமிழ் மகன்தானும்; ஆனல், ஆச்சாரியார் உட்கருத்தை அறியாமல் ஹிந்தியை ஆதரிக்கிறாராம். அது மடமை நிரம்பிய அறியாக் கூற்றும். சர். பன்னீர் செல்வம் கூற்று மடமையா, கல்வி மந்திரி டாக்டர் சுப்பராயன் கூறியது மடமையாவென்பது போகப்போக தெரிந்துவிடும். அதற்குள் பன்னீர் செல்வம் துள்ளிக் குதிக்க வேண்டாம். அவர் வார்த்தைகளைக் கண்ணுபின்னுவென்று உபயோகிக்காமல், மூளையை உபயோகித்து நிதானமாகப் பேசுவதுதான் அறிவுடைமை. ஆத்திரங்கொண்டு, அறிவை இழந்து பேசுவது அடிமுட்டாள்த்தனம்.

ஆமாம்; சர். பன்னீர் செல்வத்துக்கு ஆத்திர குணம் அதிகமுண்டு.

ஆத்திர குணமும், மண்டைக் கர்வமும் ஒன்று சேர்ந்தே அவரை இப்படிப் பேசச் செய்கிறது. ஹிந்தி இன்னதென்று தெரியாத அந்தப் பிரகஸ்பதி, ஹிந்தியைப் பற்றி வர்ணிப்பதுதான் பெரிய தமாஷ்! ஆங்கிலம், வடமொழி, பார்ப்பனத் தமிழ் ஆகிய கொச்சை மொழிகளால் முடையப்பட்டது தானும் ஹிந்தி! பலே தமாஷ்! சர். பன்னீர் செல்வம் இந்த ஹிந்தியை எங்கு கண்டாரோ, தெரியவில்லை. அவரைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் பார்ப்பனீயக் கண்ணுடன் பார்க்கும் அவருக்கு ஹிந்திகூட பார்ப்பனமாக இருக்கிறது! ஊமையன் கூட்டத்தில் உளறுவாயன் சண்டப்பிரசண்டஞ் செய்வதுபோல், சர். பன்னீர் செல்வம் அந்தமகா நாட்டில் என்னமெல்லாமோ உளறிக்கொட்டியிருக்கிறார். அவருடைய முட்டாள்தனமான பேச்சை அந்த மகாநாட்டிலிருந்தவர்கள் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார்களாவென்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இது பெரிய ஆச்சரியமல்ல. கத்தோலிக்கக் கிறிஸ்துவராகிய சர். பன்னீர் செல்வம், மதத்துக்கே பரமவிரோதிகளான சுயமரியாதைக் காரருடன் உறவாடிக் கொஞ்சிக் குலாவுவதுதான் பெரிய ஆச்சரியம்! இதைக் கத்தோலிக்க பிஷப்புகளும், குருக்களும் சகித்துக்கொண்டிருப்பது இன்னமும் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது!!

குணத்தில் உயர்ந்தது!
மணத்தில் சிறந்தது!!
சகலருக்கும் உகந்தது!!!
"வீனஸ்"
நறுமண பாக்குத்தூளே!

ஏஜண்டுகள் தேவை
மதுரை, திருச்சினப்பள்ளி, கோயம்பத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிலோன், சிங்கப்பூர்.
வீனஸ் கம்பெனி,
360 பைகிராப்ஸ் ரோடு,
ராயப்பேட்டை மதராஸ்.

சீனாவில் ஒரே வெள்ளம்

ஜப்பானியர் திண்டாட்டம் :: இயற்கையின் பெரும் உதவி

சீனாமீது ஜப்பானியர் மீண்டும் தீவிரமாகப் போர் தொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஹாங்கோவிலிருந்து 160 மைல் கிழக்கே, யாங்ட்ஸீ நதியின் இரு கரைகளிலும் ஜப்பானியர் ஏராளமான துருப்புகளை இறக்குமதி செய்தனர். இந்த ஜப்பான் துருப்புகளை சீனர் தாக்காமலிருக்கும்படி பாதுகாக்கமட்டும், சுமார் 60 கப்பல்கள் காவல் நின்றன. எனினும், சீனர்கள் ஜப்பானியரை எதிர்த்து மும்முரமாகப் போர் செய்ததால், கரையில் இறங்கிய ஜப்பான் துருப்புகள் மீண்டும் கப்பல்களில் ஏறிக்கொள்ளவேண்டியதாயிற்று. சீனர் எதிர்ப்புத் தயாராக இருப்பதால், ஜப்பானியர் யாங்ட்ஸி நதியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். கியூசியாங் என்ற இடத்திலிருந்த சீனத் துருப்புகள் ஹாங்கோவைப் பாதுகாக்க ஹாங்கோவை நோக்கிப் பின் தாங்கிப் போய்விட்டன. இதுவரையில் சீனாவில் கட்டாய ராணுவச் சேவைச் சட்டம் அமுலுக்கு வந்ததே கிடையாது. இப்பொழுது அந்தச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது.

இயற்கை உதவி

லூங் ஹாய் ரயில்வேயில் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஜப்பானியத் துருப்புகளை மஞ்சள் நதியில் திடீரெனத் தோன்றியுள்ள பெரும் வெள்ளம் தடுத்து விட்டது. சொஸ் சோவுக்குக் கிழக்கே அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிற்று. ஒரு செக்கண்டுக்கு 4 அடி வீதம் தென் கிழக்காகப் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஹாங்கோவைப் பார்த்து நிற்கும் 250 மைல் விஸ்தீரணமுள்ள ஜப்பானிய அணி வகுப்பு திரும்பிப் போக வேண்டியதாயிற்று. இந்த ஆபத்தைத் தடுப்பதற்காக ஜப்பானிய ராணுவங்களிலுள்ள இன்ஜினீயரிங் சிப்பந்திகள் யாவரும் ஒன்று திரண்டு வேலை செய்து வருகிறார்கள். ஆனால், மழை நின்றபாடில்லை. ஆகவே, இந்தப் பிரவாகத்தைத் தடுக்க முடியாதென்பதை ஜப்பானியர் உணர்ந்து கொண்டு விட்டார்கள். மஞ்சள் நதி பெருக்கெடுத்தோடுவது சீனருக்கு இயற்கையின் பெரிய உதவியேயாகும்.

$1\frac{1}{2}$ லக்ஷம் மாண்டனர்

மஞ்சள் நதி வெள்ளத்தில் சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் பேர் மாண்டிருக்கக் கூடுமென்று கூறுகிறார்கள். இந்த ஜனங்கள் அனைவரும் யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்கள். ஜப்பானியத் துருப்புகளுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டிருப்பதாகச் சீனர் கூறுகிறார்கள். சுமார் 12,000 ஜப்பானிய சோல்ஜர்களாவது மடிந்திருக்கவேண்டுமென்பது சீனர்கள் மதிப்பு. ஜப்பானியர் இது பொய்யென்று கூறுகிறார்கள். கெய்பெங்குக்கும், செங்சோவுக்கும் நடுமத்தியிலுள்ள சுங்மோ மாகாணம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாக பெய்பிங்கிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. செங்சோவுக்கு வடக்கே பல உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பானியரின் வெடிகுண்டு வீச்சே இதற்குக் காரணமென்று சீனர்கள் கூறுகிறார்கள். சீனர்களே அணைக்கட்டுகளை உடைத்திருக்கவேண்டுமென ஜப்பானியர் கூறுகிறார்கள். லூங் ஹாய் ரயில்வே பிரதேசத்திலுள்ள 2000 கிராமங்கள் கொண்ட சுமார் 900 சதுர மைல்களில் வெள்ளம் பரவியிருப்பதாகத் தெரிகிறது.

சீனரை எதிர்த்துச் சண்டை செய்யும் ஜப்பான் துருப்புகளுக்குத் தளகர்த்தராக இருப்பவர். ஜப்பான் சீனாவை ஜெயித்துவிடுமென்ற நம்பிக்கை இவருக்கு இல்லை.

குண்டு வீச்சு

இந்த ஆபத்தான நேரத்திலுங்கூட ஜப்பானியர் சாண்டன்மீது வெடிகுண்டுகள் வீசுவதை நிறுத்தவில்லை. சமீபத்தில ஜப்பான் விமானங்கள் வெடி குண்டு வீசியதால் 10 பேர் கொல்லப்பட்டனர்; 30 பேர்களுக்குக் காயம்.

யாங்ட்ஸி வெள்ளம்

மஞ்சள் நதியுடன் யாங்ட்ஸி சேர்ந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆறு தினங்களாக இடைவிடாது மழை பெய்ததால் யாங்ட்ஸி நதியிலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. ஜப்பானியர் இதனால் போரை நிறுத்தவேண்டியதாயிற்று. இதுதான் சமயமென்று சீனர் பல இடங்களிலுள்ள அரண்களை வெட்டிவிட்டு வெள்ளக் காடாக்கி வருகின்றனர். ஜப்பானியர் கைப்பற்றிய ஆன்கிங்கை, சீனர் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்களெனத் தெரிகிறது.

ஐரோப்பிய நாடுகளில் மூத்துச் சிப்பியின் சதையைப் பிரியமாக சாப்பிடுகிறார்கள். பிரிட்டனில் மட்டும் வருடமொன்றுக்கு 5 கோடி மூத்துச் சிப்பிகளை புசிக்கின்றனர்.

நம்பிக்கையும், நல்ல நிலைமையிலுமுள்ள

உபயோகிக்கப்பட்ட கார்கள்

நியாயமான கிரயத்தில் பொறுக்கி எடுத்த உபயோகிக்கப்பட்ட கார்கள், டிரக்குகள், பஸ்கள் எங்களுடைய ஆறு முக்கியமான வியாபார ஸ்தலங்களில் இருக்கின்றன. விலை ரூ. 300 லிருந்து ரூ. 3000 வரையிலுமிருக்கிறது. மேற்கூறிய உபயோகிக்கப்பட்ட கார்களின் இயந்திர சம்பந்தமான விபரங்களை அறிய விரும்புகிறவர்கள் எங்களுடைய எந்த வியாபார ஸ்தலங்களுக்கும் எழுதிக்கொண்டால் அனுப்பிவைக்கப்படும்.



இப்போதுள்ள ஸ்டாக்கிலிருந்து பொறுக்கப்பட்ட கார்கள்

சென்னையில்
1936 ஷெவர்லே சிடான்
1936 டிசோட்டோ சிடான்
1935 வாக்ஸ்ஹால் சலூன்
1934 டொராப்பிளேன் சலூன்.

பங்களூரில்
1934 டாட்ஜ் சிடான்
1934 வுல்சிலி டிக்போர்டு சலூன்
1935 போர்டு ட்ரேர்
1935 கிரிஸ்லர் சிடான்

கோயம்புத்தூரில்
1933 மாரிஸ் 10 சலூன்
1934 ஹம்பர் சலூன்
1936 ஹில்மென் மிங்ஸ் ட்ரேர்

உதகமண்டலத்தில்
1934 ஷெவர்லே சிடான்
1935 மாரிஸ் 8 ட்ரேர்
1934 போர்டு ட்ரேர்
1934 ஹப்மோபையில் சிடான்

திருச்சிறுப்பள்ளியில்
1936 ஸ்டாண்டார்டு சலூன்
1936 ப்ளீமத் சிடான்
1935 ஷிவர்லே சிடான்
1933 டாட்ஜ் சிடான்

விசாகப்பட்டணத்தில்
1934 டாட்ஜ் சிடான்
1933 மோரிஸ் 10 ட்ரேர்
1932 மாரிஸ் மேஜர் சலூன்
1931 ஆஸ்டின் ட்ரேர்

அடிசன் அண்டு கம்பெனி, லிமிடெட்., மதராஸ் & பிராஞ்சுகள்

தமிழ் மணி

சென்னை—வெகுதானியஹு ஆனிமீ 5உ (19-6-1938)

நீ தின்னு, நான் தின்னு!

ஊரார் சோத்தென்றால் உனக்கு, எனக்கு; நீ தின்னு, நான்தின்னு என்று தாராளமாகப் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். தங்கள் சோத்தென்றால் இம்மியும் இழக்க மாட்டார்கள். எச்சில் கையால் காக்கைகூட விரட்டடத் துணியாத தருமப் பிரபுக்களுமுண்டு! இது உலக இயற்கை இந்த இயற்கைரீதியையே பிரிட்டிஷாரும் கைக்கொண்டிருக்கிறார்கள்போலும்! உதாரணமாக, இந்தியராணுவத்தை எடுத்துக்கொள்ளுவோம். இந்தியாவிலிருக்கும் ராணுவம் இந்தியாவுக்கு அனுவசியமானது இந்திய பாதுகாப்பைக் கோரி பிரிட்டிஷார் இந்தப் பெரிய ராணுவத்தை இந்தியாவில் வைத்திருக்கவில்லை. பிரிட்டிஷார் நலங்கருதியே இந்த ராணுவத்தை இந்தியாவில் வைத்திருக்கிறார்கள். ஆனால், பிரிட்டிஷார் நலத்துக்காக இருக்கும் இந்த ராணுவத்துக்கு, இரத்தஞ் சிந்தப் பாடுபடும் ஏழை இந்திய மக்கள் பணத்திலிருந்து 45 கோடி ரூபாயை வருடந்தோறும் கொட்டித் தொலைக்க வேண்டியிருக்கிறது. இது அநியாயமல்லவா?

அடிமைகளே!

இந்திய ராணுவத்துக்குப் பணத்தைக் கொடுத்தும், இந்தியர் அந்த ராணுவத்துக்கு அடிமைப்படவேண்டியிருக்கிறது. இது இந்தியர் தலைவிதி என்று சொல்லாமல், வேறு என்ன சொல்ல முடியும்? அந்த ராணுவம் வேண்டாமென்றால், அது வெள்ளையர் மண்டையில் ஏறுவதில்லை. வெள்ளையருக்காக இங்கிருக்கும் ராணுவத்துக்கு வெள்ளையரே பணம் கொடுக்க வேண்டுமென்றால், அதுவும் அவர்கள்காதில் நுழையவில்லை இந்தியாவைப் பிடித்த இந்தப் பீடை என்றுதான் ஒழியுமோ தெரியவில்லை.

அனுவசியமே

இந்திய ராணுவத்தை இந்தியமயமாக்குவதென்றாலும் அதுவும் வெள்ளையருக்குப் பிடிக்கவில்லை. அதை இந்தியமயமாக்கினால், வருடமொன்றுக்கு 12 கோடி ரூபாய் மீதமாகும். அந்தப் பணத்தைக்கொண்டு இந்திய மக்களுக்கு எவ்வளவோ, நன்மை செய்யலாம். அந்தத் தர்மபுத்தி பிரிட்டிஷாருக்கு இல்லை. ஆனால், இந்திய ராணுவம் இந்தியாவுக்கு அனுவசியமென்று பிரிட்டிஷ் ராணுவ நிபுணரான லிடெல் ஹார்ட் சொல்லுகிறார். கீழ் தேசங்களாகிய சீன, ஜப்பான் முதலிய நாடுகளின் நெருக்கடியைச் சமாளிக்கவே பிரிட்டிஷார் இவ்வளவு பெரிய ராணுவத்தை இந்தியர் தலைமீது சுமத்தியிருக்கிறார்களென்பது அவர் கருத்து. 1857ம் வருடம் நடந்த சிப்பாய்க் கலகம் காரணமாக 62,000 வெள்ளை சோல்ஜர்களும், 1,25,000 இந்திய சிப்பாய்களும் இந்திய ராணுவத்திலிருந்தார்கள். இப்பொழுது 57,000 வெள்ளை சோல்ஜர்களும் 1,59,000 இந்தியசிப்பாய்களும் இந்திய ராணுவத்திலிருக்கின்றனர். இது போக 19,000 பேர் அடங்கிய எல்லைப்புற படை, 33,000 பேரடங்கிய பீரங்கிப்படை, 19,000 பேரடங்கிய டெரிட்டோரியல் படையெனப் பல ராணுவங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ராணுவங்கள் அனுவசியமானவை. இவற்றைக் குறைக்க வேண்டுமென அந்த ராணுவ நிபுணரே கூறுகிறார். ஆனால், பிரிட்டிஷாருக்கு அந்த நல்ல புத்தி வருமா? ஒருபோதும் வராது. இந்தியா சுயராஜ்யம் பெறும் வரையில் வெள்ளை ராணுவங்களை ஓட்டியடிக்க முடியாதென்பது நிச்சயம்.

முதலாளி மூர்க்கம்

கான்பூர் தொழிலாளர் பிரச்னையைத் தீர்த்து வைக்க ராஜேந்திர பாபு தலைமையில், ஐக்ய மாகாண சர்க்கார் ஒரு கமிட்டியைநியமித்தார்கள். அந்த விசாரணைக் கமிட்டியார் செய்த சிபார்சுகளை ஐக்ய மாகாண சர்க்கார் உடனே அமுலுக்குக் கொண்டுவரவில்லை. சுமார் இரண்டு மாத காலமாக அந்தச் சிபார்சுகளைப் பற்றித் தீவிரமாக ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். முடிவில், தொழிலாளர்களும், முதலாளிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதமாக சர்க்காரும் சில சிபார்சுகளைச் சேர்த்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். உடனே கான்பூர் மில் முதலாளிகள் கூச்சல் போட ஆரம்பித்தனர். அந்த சிபார்சுகளை ஏற்றுக்கொள்ள முடியாதென மூர்க்கப் பிடிவாதஞ் செய்தார்கள். கான்பூர் மில்களில் வேலை செய்த சுமார் 60,000 தொழர் வேலை நிறுத்தஞ் செய்ததற்கும் இதுதான் காரணம்.

மாதம் 15 ரூபாய்

ஐக்ய மாகாண சர்க்கார் முதலாளிகள் மூர்க்கத்தனத்தைக் கண்டு பயப்படவில்லை. அவர்கள் உருட்டலைக் கண்டும் அஞ்சவில்லை. நூற்றல், நெசவுத் தொழிலாளருக்குக்குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு சுமார் 15 ரூபாயாவது சம்பளம் கொடுக்கவேண்டுமென சர்க்கார் தீர்மானமாகக் கூறிவிட்டார்கள். தொழிலாளர்களிடம் அதிக நேரம் வேலை வாங்கக் கூடாதென்றும் கண்டிப்பாக உத்தரவு போட்டிருக்கிறார்கள் முதலாளிகள் உறுமல் இன்னமும் நிற்கவில்லை. முதலாளிகள் வழிக்கு வராது போனால், ஐக்ய மாகாண சர்க்கார், அவர்களுடைய அதிகாரங்களைப் பிரயோகித்து முதலாளிகளின் மூர்க்கத் தனத்தை அடக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ஐக்ய மாகாண காங்கிரஸ் சர்க்காரின் உறுதியை எல்லோரும் பாராட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை.

வேலை நிறுத்தம்

சூளை மில்லில் வேலை செய்து வந்த சுமார் 2,295 தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கிறார்கள். இவர்களில் ஆண்கள் 2145. பெண் தொழிலாளர் 150 சம்பளக் குறைவே இவர்கள் வேலை நிறுத்தத்துக்கு முக்கிய காரணமெனத் தெரிகிறது. மில் முதலாளிகளுக்குப் போதிய வருமானமில்லாததால் சம்பளம் கூட்டிக் கொடுக்க முடியாதென்று பிடிவாதமாகத் தெரிவித்துவிட்டார்கள். வேலை நிறுத்தம் சாத்வீகமாகவே நடைபெறுகிறது. தொழில் மந்திரி கிரி சென்னை வரும் வரையில் தொழிலாளர்கள் காத்திருக்கிறார்கள் மந்திரி கிரி சமசரத்துக்கு ஒரு சரியான வழி கண்டுபிடிப்பாரென்று நம்புகிறோம்.

லாபம் வந்தால்?

தொழிலாளர்களுக்குச் சம்பளம் கூட்டிக் கொடுப்பதென்றால் முதலாளிகளுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. ஏராளமானலாபம் வந்தால் அந்த லாபத்தை முதலாளிகள், தொழிலாளர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுக்கிறார்களா? அல்லது, சம்பளம் கூட்டிக் கொடுக்கிறார்களா? இல்லை. நஷ்டம் வந்தால் மட்டும் தொழிலில் லாபமில்லையென்று கையை விரிக்கிறார்கள். லாபம் தேடும்போது வாரிக்குவித்த முதலாளிகள் நஷ்டம் வந்தாலும் அவர்கள் ஏற்கனவே அடைந்த லாபத்திலிருந்து அதிகச் சம்பளம் கொடுப்பதே நியாயம். அதற்காக ஏழைத் தொழிலாளர் வயிற்றில் மண்ணைப் போடுவது பாவம். தொழிலாளர்களிடம் தாராள சிந்தனையுடன் நடந்துகொள்ளும் முதலாளிகள் வெகு சொற்பம் எனெனில், கொள்ளென்றால் வாய் திறப்பதும், கடிவாளமென்றால் வாயை மூடிக் கொள்ளும் முதலாளிகளே ஏராளமாக இருக்கிறார்கள். இது முதலாளிகளின் உடன் பிறந்த சுபாவம்.

லீக் போக்கு

முஸ்லிம் லீகின் போக்கு அந்த லீகிலுள்ள சில முஸ்லிம் தலைவர்களுக்கும், காங்கிரசிலுள்ள முஸ்லிம்களுக்கும், வேறு முஸ்லிம் ஸ்தாபனங்களிலுள்ள பிரபல முஸ்லிம்களுக்குக் கூடப் பிடிக்கவில்லை. லீகின் வாதமும், ஒரு தலைப் பட்ட கோரிக்கைகளுமே இதற்குக் காரணம். முஸ்லிம்லீக்தான் முஸ்லிம்களின் ஏகபிரதிநிதிசபை என்பதை அநேக முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. வங்காளஹிந்து முஸ்லிம் ஒற்றுமை சங்கத்தின் தலைவரான மூர்ஷிதாபாத் நவாப், லீகின் போக்கைக் கண்டித்திருக்கிறார். அலகாபாத்திலுள்ள ஷியா முஸ்லிம்கள், அகில இந்திய ஷியா அரசியல் மகாநாடுதான் ஷியா முஸ்லிம்களுக்குப் பிரதி நிதித்துவம் வாய்ந்ததென்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்களும் லீகை ஏற்றுக் கொள்ளவில்லை. பாஞ்சால இந்திய வர்த்தக சங்கத்தலைவரும், மாஜி சட்டசபை அங்கத்தினருமான கான் பகதூர் சர்தார் ஹபிபுல்லாகூட லீகின் போக்கைக் கண்டித்திருக்கிறார்.

மூடக் கோரிக்கைகள்

“லீகின் மூடத்தனமான கோரிக்கைகளுக்குப் பின், பம்பாய் சமரசப் பேச்சு முறிந்து விடுமென்பதில் சந்தேகமென்னவிருக்கிறது? பொதுவாக இந்தியருக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் சேவை செய்யக் கூடியஒரு அரிய சந்தர்ப்பத்தை முஸ்லிம் லீக் கை நழுவ விட்டுவிட்டது” என்று சர்தார் ஹபிபுல்லா வருந்துகிறார். அவர் கூறுவது முற்றிலும் உண்மை. தங்களைத் தாமே முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக்கிக் கொண்ட லீக் தலைவர்கள், காங்கிரஸ் போன்ற ஒரு பெரிய தேசீய ஸ்தாபனத்திலிருந்து “சர்ட்டிபிக்கட்” பெற விரும்புகிறார்கள். இவர்கள் சுயநலத்தை இந்திய முஸ்லிம் மக்கள் அடியோடு தட்டிவெறிய வேண்டும். தேசீய முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இந்திய முஸ்லிம் மக்கள் அனைவரையும் சரியான பாதையில் நடத்திச்செல்ல முன்வருவார்களாக. அதுவே முஸ்லிம் மக்களைத் தலைவர்கள் செய்யும் பெரிய சேவையாகும்.

ஒரு வார்த்தை

சீனாவில் 42 கோடி மக்களிருக்கிறார்கள். அவர்களில்சுமார் 5 கோடி சீனமுஸ்லிம்களிருக்கின்றனர். அந்த 5கோடி சீன முஸ்லிம்களுக்கும் சீனாதான் தாய் நாடு. சீனரோடு தோள் பொருந்தி ஜப்பானியரைத் தீவிரமாக எதிர்த்துப் போராடி வருகின்றனர் சீன முஸ்லிம்களைப் பிரிக்க ஜப்பானியர் எவ்வளவோ சூழ்ச்சி செய்தும், ஜப்பானியர் சூழ்ச்சி சீன முஸ்லிம்களிடம் பலிக்கவில்லை. இதற்குக் காரணம் சீன முஸ்லிம்களின் தேசபக்தியேயாகும். இந்தச் சீன முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கண்டாவது, இந்திய முஸ்லிம்கள் கண் திறப்பார்களென்று நம்புகிறோம். இந்திய முஸ்லிம்களுடையே தேசீய விழிப்பு ஏற்பட்டாலொழிய இந்தியா சுயராஜ்யம் அடைவது எளிதல்ல. சகல இந்திய முஸ்லிம்களும் தேசீய நோக்கத்துடன் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட முன்வருவார்களாக.



ம ணி யோ ஸை

ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

திருச்செங்கோட்டையில் ஹரிஜனங்களுக்காக மனம் உருகப் பேசினீர்கள். "ஹிந்து சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் கோவில்களுக்கு வெளியில் வைத்திருப்பது தவறு என்று நான் கருதிவருகிறேன். இன்று தீண்டாதவருக்குக் கோவில்களைத் திறந்துவிட ஒரு வழி காண்பித்து, அதுதான் சரியான வழி என்பதில் என்னைத் திருப்தி செய்தால், அதை, எனது பதவியையும் கருதாது செய்து முடிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறினீர்கள். உங்களுக்கு வழி காண்பிப்பது யார்? ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை கொடுக்கக் கூடிய வழியை நீங்கள் தான் காட்டவேண்டும். எல்லோரும் உங்களையே நம்பியிருக்கிறார்கள். சேலம் மதுவிலக்கு, ஏழை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், கடைசியாக ஹிந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவருவதற்கான வழிகளையெல்லாம் உங்களுக்குக் காட்டியது யார்? யாருமல்ல; நீங்கள் தான். ஹரிஜனங்கள் விஷயத்தில் மட்டும் நீங்கள் பிறரை வழிகாட்டும்படி கேட்பது விசித்திரமாக இருக்கிறது இது தட்டிக் கழிக்கும் புத்தியென்றே நினைக்கிறேன் ஒரு வேளை வைதீகக் குடுக்கைகள் வழி காட்டும் வரையில் காத்திருக்கிறீர்களா? அப்படியானல், இந்த யுகத்தில் நீங்கள் வழி காண முடியாது. சமுத்திர அலைகள் ஓய்ந்தபின் ஸ்நானஞ்செய்யலாமென்று காத்திருக்க வேண்டியதுதான்! சமுத்திர அலைகள் ஓய்ந்தாலும் ஓயும்; வன்மனம் படைத்த வைதீகப் பித்தர்கள் பிடிவாதந் தளரவே தளராது. இவ்விஷயத்தில் ஹரிஜனங்களுக்குத் துரோகஞ் செய்யவேண்டாம். என்ன எதிர்ப்பு வந்தாலுஞ் சரி; ஹரிஜனங்களுக்குக் கட்டாயம் ஆலயப்பிரவேச உரிமை கொடுத்தே தீரவேண்டும். இதனல், காங்கிரஸ் மந்திரிசபை ஒழிந்தாலும் பாதகமில்லை. அதி சீக்கிரத்தில் நீங்கள் ஒரு வழி கண்டுபிடித்து, சரியான மசோதாவொன்று கொண்டு வருவீர்களென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

சர். பன்னீர் செல்வம்,
தஞ்சை.

மாஜி "பினமி மந்திரியே"!

விருதுநகரில்கூடிய முதல்சு ம. தமிழ் மகா நாட்டில் நீங்கள் உளறிக் கொட்டியது ஒரு புறமிருக்கட்டும்; உங்கள் பிரசங்கத்தின் ஒரு பகுதியில் தமிழருக்குப் பொதுவாக ஒரு செய்தி கூறியிருக்கிறீர்கள். "நாம் ஒரு இனத்தவர் எனும் ஒரு கட்டினுள் ஒற்றுமைப் பட்டிருக்கிறேம். நமது உயிரினும் சிறந்தவை என மதிக்கபெறும். உன்னதமான தமிழரின் கொள்கையையும், உயர்ந்த நாகரீகத்தையும் பிறப்புரிமையில் அடைந்திருக்கிறேம்" என்றீர்கள். உங்கள் பேச்சு அலங்காரமாகத் தானிருக்கிறது. ஆனல், உண்மை என்ன தெரியுமா? தமிழர், தமிழன் என்ற ஒரு கட்டினுள் கட்டப்பட்டிருந்த போதிலும் தமிழருக்குள்ளாகவே உயர்வு தாழ்வு என்ற பேதம் ரொம்ப உண்டு. பார்ப்பனர் பெரியவரென்று கூறினல், ஒவ்வொரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதி ஒரு பார்ப்பன ஜாதிதான். ஜாதிபேயும் தமிழ் நாட்டில் அவ்வளவுக்குத் தலைவிரித்தாடுகிறது. சூத்திரனுக்கு வைசியன் பார்ப்பனன்; வைசியனுக்கு க்ஷத்திரியன் பார்ப்பனன்; க்ஷத்திரியனுக்குப்பார்ப்பானிருக்கிறன். இவ்வாறு உயர்வு தாழ்வு இருக்கும்வரையில் வாயளவில் ஒன்றென்று கூறிக்கொண்டிருக்க வேண்டியதுதான்; காரியத்தில் நடைபெறவே பெறாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

டிங்—டாங்

வி. வி. கிரி,
கும்பகோணம்.

தொழில் மந்திரியே,

கும்பகோணத்தில் நீங்கள் பிரசங்கஞ் செய்தபோது, "இப்பொழுது காங்கிரசில் வந்து சேரும் காங்கிரஸ்காரர்களிடமிருந்து நாம் போதிய பலனை அடைய முடியாது. ஏனெனில், அவர்களெல் அதிகார பதவியையும், சொந்த சௌகரியத்தையும் உத்தேசித்துக் காங்கிரசில் சேர்ந்தவர்கள். உள்ளன்புடன் காங்கிரசில் சேர்ந்தவர்களல்ல. உள்ளன்புடன், எந்தத் தியாகத்துக்கும் தயாராக உள்ளவர்களையே காங்கிரஸ் எதிர்பார்க்கிறது" என்று கூறினீர்கள். ரொம்ப சந்தோஷம்; காங்கிரசில் நல்லிக்காய் முட்டைகள் ஏராளமாக வந்து குவிந்துகொண்டிருக்கின்றன வென்ற உண்மையை நீங்கள் அறிந்து கொண்டதற்குச் சந்தோஷிக்கிறேன். உங்கள் வார்த்தைகளை, அப்படியே தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் முத்துரங்க முதலியாருக்கு அர்ப்பணஞ் செய்கிறேன்.

டிங்—டாங்

ஜே. ஸி. வர்க்கி,
கோயம்புத்தூர்.

கல்விக் காரியதரிசியே,

கோவையில் கூடிய இந்தியக் கிறிஸ்துவர்கள் கூட்டத்தில், இந்தியக் கிறிஸ்துவர்களுக்கு நீங்கள் கூறிய புத்திமதிகளைப் பாராட்டுகிறேன். "கிறிஸ்துவர் ஏராளமாகக் காங்கிரசில் சேரவேண்டும். சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியது காங்கிரஸ் ஒன்றுதான் இந்தியக் கிறிஸ்துவர், அகில இந்திய ஸ்தாபனமொன்று ஏற்படுத்தி, அதின் மூலம் இந்தியக் கிறிஸ்துவர்கள் உரிமைக்குப் போராட நோக்கம் கொண்டிருக்கிறர்களெனத் தெரிகிறது. ஆனல், அந்த வகுப்பு ஸ்தாபனம் இந்திய முஸ்லிம் லீக்கைப் பின்பற்றக் கூடாது" என்று நீங்கள் கொடுத்த எச்சரிக்கை ரொம்ப சரி. குறுகிய நோக்கமும், பிற்போக்கான புத்தியுமுடையவர்களிடம் எந்த ஸ்தாபனம் அகப்பட்டாலுஞ்சரி, அது முஸ்லிம் லீக் கதியையே அடையும். இவ்விஷயத்தில் கிறிஸ்துவர்கள் எச்சரிக்கையாக இருப்பார்களாக கல்வியில் கிறிஸ்துவர் பேர் போனவர் தான்; ஆனல், அவர்களிடமே பெரும்பாலும் மேனாட்டு நாகரீக மோகம் ஊறிப்போய்க் கிடக்கிறது அந்த மோகத்துடன் சுயநல அரசியல் மோகமும் கலந்துவிடக் கூடாதென்பதே எனது வேண்டுகோள்.

டிங்—டாங்

பஷீர் அஹமது சையது,
சென்னை.

லீக்-காங்கிரஸ் நண்பரே!

தாங்கள் ஒரு படகில் கால் வைக்க வேண்டும். இரு படகில் கால் வைத்தால் ஆபத்துத்தான்! நீங்கள் கும்பகோணத்தில் பேசியதைப் பார்த்தால், நீங்கள் லீகைச் சேர்ந்தவர்களா, அல்லது, காங்கிரஸைச் சேர்ந்தவர்களா வென்பதை நிச்சயமாக அறிந்து கொள்ள முடியவில்லை. முஸ்லிம்கள், லீகிலும் சேர்ந்திருக்கலாம், காங்கிரசிலும் சேர்ந்திருக்கலாமென்று நீங்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. லீகும், காங்கிரசும் எந்தவிதமான மனப்பான்மை கொண்டிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். இரண்டுக்கும் மடுவுக்கும், மலைக்குமுள்ள வித்தியாசமுண்டு. ஆனல், ஹிந்தி விஷயத்தில் நீங்கள் காங்கிரஸை ஆதரித்ததற்கு உங்களைப் பாராட்டுகிறேன் உங்களுக்கு ஏற்பட்ட நல்ல புத்தி கலி புல்லா வகையறவுக்கும் ஏற்பட்டால் எவ்வளவோ நலமாயிருக்கும்.

டிங்—டாங்

சுபாஷ் சந்திரபோஸ்,
கல்கத்தா.

ராஷ்ட்ரபதி,

உங்கள் யாத்திரையில், சில முஸ்லிம் லீக் காலிகளால் நீங்கள் அடிபட நேர்ந்ததற்கு வருந்துகிறேன். உங்கள் அறிக்கையும், அதில் ததும்பும் வீர உணர்ச்சியும் முஸ்லிம் லீக் தலைவர்களின் கண்களைத் திறக்குமென்று நினைக்கிறேன். கோமிலாவில் நீங்கள் கூறியது இன்னும் விசேஷமாகும். "வங்க மந்திரி சபையில் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருப்பதால் காங்கிரஸ்காரர் அதைத் தாக்குவதாகப் புகார் கூறுகிறர்கள் வங்க மந்திரி சபையில் 11 தேசிய முஸ்லிம்கள் மந்திரிகளாக இருக்கட்டும்; அந்த மந்திரிகளை எதிர்க்கவே மாட்டோம். பிற்போக்கான ஹிந்து மந்திரிகள் பதவி ஏற்றபோதிலுஞ்சரி; இப்போதுள்ள மந்திரி சபையிலிருக்கும் முஸ்லிம்களை எதிர்ப்பது போல், அந்த ஹிந்து மந்திரி சபையையும் எதிர்த்தே தீருவோம்" என்றீர்கள். உங்கள் மனப்போக்கை அறியாத நீர் மூடர்களே உங்கள்மீது குற்றஞ் சுமத்துவார்கள். பரந்த நோக்கமும், உயர்ந்த தேசியக் கொள்கையுமுடைய எந்த உண்மையான முஸ்லிமும் உங்களை ஆதரித்தே தீருவான். உங்கள் நோக்கத்தை அறிந்துகொள்ள சக்தியில்லாத மண்டுகளிடம் பேசித்தான் என்ன பயன்? கழுதைக்கு உபதேசஞ் செய்தமாதிரிதான். ஒரு கல்லடி பெரிய காயமல்ல; தேசத்துக்காக உயிரையும், ஒவ்வொரு துளி இரத்தத்தையும் தத்தஞ் செய்யத் தயாராகக் காத்திருக்கும் உங்களுக்கு, இந்த சிறு மலைப்பிஞ்சு அடி ஒரு பெரிதா? போனது போகட்டும். உங்கள்மீது வஞ்சந் தீர்த்துக்கொள்ள எண்ணிய முஸ்லிம்களுக்கு நீங்கள் சிந்திய இரத்தம் மனமாற்றத்தை உண்டுபண்ணுமென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

பண்டித ஜவார்லால் நேரு,
மாட்ரிட். (ஸ்பெய்ன்)

பண்டித சிங்கமே,

தாய்நாட்டிலிருந்து புறப்பட்ட நீங்கள் இப்போது வெடிக்குண்டுகள் வருஷிக்கும் ஸ்பெய்ன் போர்முனையிலிருப்பதைக் காணச் சந்தோஷிக்கிறேன். இச் சந்தர்ப்பத்தில் அந்தப் போர்முனைக்குச் செல்ல யாருக்கும் துணிவு வராது. அது ஒன்றே உங்கள் வீரத்தையும், அஞ்சா நெஞ்சத்தையும் நிரூபிக்கப் போதுமானது. அது ஒருபுறமிருக்க; நீங்கள் ஜெனேவாவிலிருந்து புறப்படுவதற்குமுன், 'நாங்கள் சுதந்திரத்துக்காகப் போராடுகிறேம். சுதந்திரம் பெறும் வரையில் ஓய்வு எடுத்துக் கொள்ளமாட்டோம். இதில் சமரசத்துக்கோ, அல்லது, ராஜிக்கோ இடமே இல்லை" என்று ஒரு போடு போட்டீர்கள். நீங்கள் ஜெனேவாவில் போட்ட வெடிக்குண்டு, பிரிட்டனை ஒரு கலக்குக் கலக்கி யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

டிங்—டாங்

பி. ஜி. கேர்,
பம்பாய்.

முதன் மந்திரியே,

தீண்டாதார்மீது உங்களுக்கிருக்கும் கருணையைப் பாராட்டுகிறேன். "தீண்டாமைக்கு இடமளிக்கும் சுயராஜ்யத்தை நான் விரும்பவில்லை. தீண்டாதாரை அனுமதிக்காத ஹோட்டல்களுக்கு இருக்கும் லைசென்ஸை ரத்து செய்வதும் சர்க்காரின் ஒரு நடவடிக்கை யாகும்" என்றீர்கள். ரொம்ப சந்தோஷம். ஹோட்டல்களில் பார்ப்பனருக்கு, தீண்டாதாருக்கென இடங்களைப் பிரித்து வைத்திருப்பதை அடியோடு ஒழிக்கவேண்டும். அது மட்டுமல்லாது தீண்டாதார் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்க மறுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் பொருளுதவி கொடுக்கக்கூடாது. இந்த முறைகளைச் சென்னை சர்க்காரும் சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவந்தால் நல்லது. உங்களுக்கிருக்கும் துணிகரமும், தைரியமும் சென்னை மந்திரிகளுக்குமிருக்குமென்று நம்புகிறேன்

டிங்—டாங்

உடனே தேவை.

மாயவரம், ஆம்பூர்,
தென்காசி, நாசிரத்,
திருவனந்தபுரம், நாமக்கல்,
ஆகிய இடங்களுக்கு டிப்பாஸிட் கட்டக்கூடிய நாணயமுள்ள ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர், தமிழ்மணி.

ஐரோப்பா ஆட்டம்

பூகம்பம் குமுறுகிறது :: :: கலகக்காரர் வெற்றி

ஸ்பெய்னில் தீவிரமாக முன்னேறிவரும் கலக ஜெனரல் பிராங்கோ.

ஐரோப்பாவை ஒரு யுத்த பூகம்பம் ஆட்டிவைப்பதற்குமுன், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், ஹாலந்து முதலியதேசங்களில் மெய்யாகவே ஒருபூகம்பம் ஏற்பட்டுப்பல தடவைகள் ஆட்டிவைத்துவிட்டது. எண்டனில மட்டும் 30 அதிர்ச்சிகள் ஏற்பட்டன. பெல்ஜியத்தில் 70 அதிர்ச்சிகள் ஏற்பட்டன. இதனால், அதிக உயிர்ச்சேதம் ஏற்படாதுபோயினும், சிற்சில கட்டிடங்களுக்குச் சேதமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பூகம்ப அதிர்ச்சி ஐரோப்பாவில் வரப்போகும் யுத்த பூகம்ப அதிர்ச்சியின் அறிகுறிபோலும்!

ஸ்பெய்ன் சங்கடம்

ஸ்பெய்னில் கலகக்காரர் தீவிரமாக முன்னேறி வருகிறார்கள். வெடிக்குண்டுகள் எப்பொழுதும் போல் விழுந்துகொண்டேயிருக்கின்றன. காஸ்டெலான் என்றவிடத்தில்தான் போராட்டம் மும்முரமாக நடந்து வருகிறது. கலகக்காரர் அங்கு தீவிரமாக முன்னேறி வருகின்றனர். அலிகாண்டோமீது கலக விமானங்கள் வெடி குண்டு எறிந்ததால் 500 பேர் மாண்டனர். 1500 பேர் காயமடைந்தனர்.

பிரிட்டன் முறுக்கு

ஸ்பெய்ன் கலகக்காரர் பல பிரிட்டிஷ் கப்பல்கள் மீது வெடி குண்டுகளை எறிந்து சில கப்பல்களை மூழ்கடித்து விட்டனர். இதனால் பிரிட்டனில் கலகக்காரர்மீது அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ்முதன்மந்திரி சேம்பர்லேன் ஜெனரல் பிராங்கோவைப் பயமுறுத்திப் பார்க்கிறார். ஸ்பெய்ன் கடற்கரை யோரத்தில் பிரிட்டிஷ் கப்பல்கள் போகக்கூடாதெனக் கப்பல்காரரையும் எச்சரித்திருக்கிறார். ஆனால், ஸ்பெய்ன் கலகக்காரர் சேம்பர்லேன் பூச்சாண்டிக்குப் பயப்படவில்லை. அவர்கள் எப்பொழுதும் போல், அந்நிய கப்பல்கள்மீது வெடிகுண்டு எறிந்தே வருகின்றனர். இதாலி, ஜெர்மனியின் உதவி இருக்கும்போது, பிராங்கோ பிரிட்டிஷார் பயமுறுத்தலை லட்சியஞ் செய்வாரா?

ஜனங்கள் தவிப்பு

ஸ்பெய்ன் கலகக்காரர் காஸ்டெலன் நகரைக் கைப்பற்றிவிட்டனர் கலகத் துருப்புகள் அந்த நகரத்துக்குள் நுழைந்தபோது ஜனங்கள் கலகக்காரரை சந்தோஷ ஆரவாரத்துடன் வரவேற்றார்கள் அந்நகர் முற்றுகையிடப்பட்டிருந்ததால்ஜனங்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை கலகக்காரர் வந்தாலுஞ்சரி, யார் வந்தாலுஞ்சரி ஜனங்களுக்கு ஆகாரம் கிடைக்குமேயென்ற எண்ணமே அவ்வித ஆரவாரஞ்செய்யக் காரணம். இந் நகரிலுள்ள ஜனங்கள் ஆகாரத்தைக் கண்ணால் கண்டு பல தினங்களாயிற்று! கலகக்காரர் பல லாரிகளில் இதர இடங்களிலிருந்து ஆகாரம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஜெர்மன் கப்பல்

சில ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் காஸ்டெலன்மீது வெடிகுண்டுகளை எறிந்ததாகத் தெரிகிறது. ஜெர்மன் நீர் முழுகிக் கப்பல்கள்கூட ஜிப்ரால்ட்டர் வழியாக அடிக்கடி வந்து, ஸ்பெய்ன் கடற் கரையோரங்களில் சுற்றித் திரிந்து வருவதாகக் கூறுகிறார்கள். காஸ்டெலன் போர் முனையில் சர்க்கார் துருப்புகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். பல யுத்த டாங்கிகள் தீக்கிரையாயின டாங்கிகளில் இருந்தவர்கள் உயிர் தப்பியோடப் பெரிதும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. காஸ்டெலனுக்கு 6 மைல் தூரத்திலுள்ள வில்லாரியல் என்ற நகரத்தையும் கலகக்காரர் பிடித்துக் கொண்டார்கள். காஸ்டெலான் வெற்றி அதிக முக்கியமானதாகும். ஆகவே, பிராங்கோவுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

குண்டு வீச்சு

ஸ்பெய்ன் கலகக்காரரை எதிர்த்துச் சண்டைசெய்த 6000 சர்க்கார் துருப்புகள் திடீரென மறைந்துவிட்டன. அந்தத் துருப்புகள் யாவும் பிரஞ்சு எல்லைப்புறத்தைத் தாண்டிப் போய்விட்டதாகச் சிலா கூறினார்கள். அந்த 6000 துருப்புகள் மீண்டும சர்க்கார் சார்டாகச் சண்டைசெய்ய ஸ்பெய்னுக்குத் திரும்பி வந்திருக்கின்றன பேமிபன் கெட்ரே என்ற இடத்துக்கு 2000 பேர்களும், கெனக் கணவாய் வழியாக 4000 பேரும் அரக்னாட் என்ற விடத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் பார்ஸிலோனா மீது வெடிகுண்டு விசுவது ஓயவில்லை தெற்கே கர்டோவா முனையில் மீண்டும் போராட்டம் தீவிரமாக ஆரம்பித்திருக்கிறது.

QUEEN'S FABRIC

"குயின்ஸ் பாப்ரிக்"

இந்த மார்க்குள்ள துணிகள் பெண்களுக்கு ஏற்றது. அவர்கள் விரும்பும், அழகான நிறங்களில் பள பளப்பான நூலால் தயாரிக்கப்பட்டது. பெண்கள் கண்ணைக் கவரும் டிசைன்கள் அச்சிடப்பட்டது.

உயர்ந்த கெட்டிச் சாயம்
நீங்கள் துணிவாங்கும் போது
கெஜத்துக்குக் கெஜம் மேற்கூறிய
மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்

மொத்தமாக இறக்குமதி செய்வோர்

KISHINCHAND CHELLARAM
(THE FAVOURITE SHOP)
RATTAN BAZAAR, Madras.

கிஷின் சந்த் செல்லாராம்
(எல்லோரும் ஆதரித்து வரும் முக்கிய கடை)
ராட்டன் பஜார், மதராஸ்.

"இந்திரா" பேர்பெற்ற கெடியாரம்



உலகப் பிரசித்திபெற்ற
"சேத்தாமஸ்"
கெடியாரத்தைப் போல்
அமைக்கப்பட்டிருக்கிறது.

8 தினங்களுக்கு ஒரு முறை சாவி கொடுக்கவேண்டும். ஒரு மணி, அரை மணி அடித்துக் காட்டும். குரோமியம், அல்லது பித்தளை பூச்சுடைய பளபளப்பான மூடியுடையது.

8" டயல்	ரூ. 10-0-0
10" ,,	,, 14-0-0
12" ,,	,, 18-0-0

அனுப்புகிற இடத்துக்கு சார்ஜ் வேறு.

ஆர்டர் கொடுக்கும்போது ரூ. 5. முன்பணமாக அனுப்பவேண்டும்,
10 வருடங்களுக்கு உத்திரவாதமானது.

ஜலால் அண்டு சன்ஸ்
(சர்க்கார் கண்ட்ராக்டர்கள், வாட்ச் மேக்கர், நகை வியாபாரிகள்
ஹைதராபாத், மைசூர்)
46, ரட்டன் பஜார், சென்னை.

பிராஞ்சு:— 190, பி. மவுண்ட் ரோட், சென்னை.
1242-1, ஆபீட் ரோட், ஹைத்ராபாத், டெக்கான்.

பொஹீமியாவின் தெற்குப் பிரதேசத்தில் வசித்துவரும் ஜோசப் நோவன்றி என்பவர் இரு எலிகளுக்கு எழுதப் படித்துக் கொடுத்திருக்கிறார். அவர் உத்திரவு கொடுத்ததும் இரு எலிகளும், கால்களை மையில் தொட்டு, புள்ளி, கோடு முதலியவைகளை எழுதுகின்றன. மிருகங்களைப் பழக்குவதில் இவர் பேர் பெற்றவர். ஒரு காலத்தில் இவர் சிங்கங்களைக் கூடப் பழக்கி வந்தவர்.



சங்கநாதம்

உடும்பு வேண்டாம், ::
:: கையை விட்டால் போதும்

பிள்ளையார் பிடிக்கக் குரங்கு!

திருடனை கொட்டிய தேள்

மாஜி, பிறமிகள் தில்லாலே!
(பூம்-பூம்)

ஒரு கிழ நரிக்கு இரை தேடித்தின்ன சக்தியில்லை. பசி பட்டினி மிகுந்து வருந்தியது. எத்தனை நாளைக்குக் கஷ்டப்படுவது? எப்படியும் வயிறு வளர்க்கவேண்டும். அதற்கு என்ன செய்வதென்று யோசனை போட்டது. நரி மகா தந்திரமான மிருகமல்லவா? அதற்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. உடனே ஆற்றங்கரை ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு, பரிதாபமாக ஊளையிட்டுக்கொண்டிருந்தது. ஆற்றங்கரை ஓரத்தில் வந்த நண்டுகளை நரி பார்த்தது ஒன்றுஞ் செய்யவில்லை. நண்டுகள் நரிக்குப் பிரியமான ஆகாரம். அப்படியிருந்தும், நண்டுகளை அது பிடித்துத் தின்னாததால் நண்டுகளுக்கு நரியிடம் நம்பிக்கை ஏற்பட்டது. சில துணிந்த நண்டுகள் நரியிடஞ்சென்றன. "அப்பா நரியே! நீயேன் விசனமுற்றிருக்கிறாய்?" என்று கேட்டன. நரி மகா துக்கத்துடன், நண்டுகளே! உங்களுக்கு ஆபத்து வந்துவிட்டது. இந்த ஆற்றிலுள்ள நண்டுகளை யெல்லாம் பிடித்துக்கொண்டுபோக சிலர் யோசனை போடுகிறார்கள் உங்கள் உயிருக்கு ஆபத்து வருகிறதே யென்றுதான் வருந்துகிறேன்" என்றது நரி. நண்டுகளுக்கு இன்னமும் அதிக நம்பிக்கை ஏற்பட்டது "எங்கள்மீது அன்புகொண்டுள்ள நரியே! எங்கள் உயிருக்குவரும் ஆபத்தைக் கூறினாய்; அந்த ஆபத்திலிருந்து நாங்கள் உயிர் தப்புவதற்கு வழி என்ன? அதையும் நீயே கூறவேண்டும்" என்று நண்டுகள் மன்றாடிக் கேட்டுக்கொண்டன. நரிக்குப் பரம சந்தோஷம் "நண்டுகளே! நான் உங்கள் நண்பன்; உங்கள் உயிரை எப்படியும் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நதிக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு ஏரி இருக்கிறது. அங்கு ஏராளமான இரையும் அகப்படும். நீங்கள் இன்றிரவு என்னோடு புறப்பட்டு வந்தால், உங்களை அந்த ஏரியில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். நீங்கள் ஏரியில் சுகமாக வாழலாம்" என்றது அந்தக் கபட நரி. நண்டுகளும் முழு நம்பிக்கையுடனிருந்தன.

* * *

அன்றிரவு நல்ல சந்திரன் ஒளி நரியுடன் நண்டுகள் புறப்பட்டன. பாதி தூரம் வந்ததும் நரி திடீரென ஊளையிட்டது. உடனே அக்கம் பக்கமுள்ள நரிகளெல்லாம் ஓடி வந்து நண்டுகள்மீது பாய்ந்து கடித்து வயிறாரத் தின்றன. தப்பிப் பிழைத்த நண்டுகள் தலை பிழைத்தது தம்பிரான் சித்தம் என்று பழைய நதியை நோக்கி ஓட்டமெடுத்ததாக ஒரு கதையுண்டு.

* * *

ஹிந்தி எதிர்ப்பு "வீரர்" தந்திரமான நரிக்கு ஒப்பானவர்கள். தமிழுக்கே ஆபத்து வந்து விட்டதென்று ஓரே பிடியாக ஊளையிடுகிறார்கள் தமிழரை ஏமாற்ற ஜகஜாலப் புரட்டுகளெல்லாம் செய்கிறார்கள். பாவம்! இவர்கள் உருட்டுப் புரட்டில் அகப்பட்ட சில தமிழர் உண்மையறியாமல், புத்தி தடுமாறிப் போயினர். இரண்டொருவர் பட்டினி கிடக்கிறார்கள். ஒரு சிலர் முதன் மந்திரி வீட்டில் சத்தியாக்கிரகஞ் செய்கிறார்கள். இந்தச் சத்தியாக்கிரகத்தால் தமிழ் நாட்டையே தலைகீழாகப் புரட்டி விட்டோமென்று மனப்பால் குடிக்கிறார்கள். சென்னையில் எங்கேயோ இரண்டொரு மூலைகளில ஹிந்தியை எதிர்த்துக் கூட்டம் போட்டுவிட்டால், சென்னையெங்கும் ஓரே ஹிந்தி எதிர்ப்புச் செய்து விட்டதாக எண்ணிக்கொண்டு பிரமாதமாகப் பிரசாரஞ் செய்கிறார்கள். எந்த மூலையிலிருந்து இவர்கள் எதிர்ப்பு வருகிறதென்பதுகூட அநேக சென்னைவாசிகளுக்குத் தெரியாது.

* * *

இந்த நிலைமையில் ஹிந்தியை எதிர்த்துப் "பெரிய போர்" ஆரம்பித்துவிட்டதாக மனதுக்குள் எண்ணம். அவர்கள் ஆரம்பித்த சத்தியாக்கிரகங்கூடப் புகைப்போல் மறைந்துகொண்டு வருகிறது. கைதியான "வீர" சத்தியாக்கிரகிகள் வெகு சொற்பம். அவர்களுக்கு கூட ஹிந்தி எதிர்ப்பில் புளிப்புத் தட்டிவிட்டது. மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தால் போதுமென்று, மாஜிஸ்திரேட்டுக்கு மனுச் செய்திருக்கிறார்கள். ஹிந்தி எதிர்ப்புக்கு மூலகாரணமாயிருக்கும் வீராதி வீரத் தலைவர்களோ இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் காணவே காணோம். ஹிந்தி எதிர்ப்பைக்காட்டி ஜாதித் துவேஷத்தை மூட்டிவிட்டால், ஜாதித் துவேஷங்கொண்ட இந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் இயக்கத்தில் ஏராளமாகச் சேருவார்கள்; ஹிந்தி எதிர்ப்புப் "போர்" மகா தீவிரமாக நடக்குமென்று மனக் கோட்டை கட்டினர்கள். அந்த மனக் கோட்டையும் இடிந்து தகர்ந்து மண்ணாயிற்று. "ஐயோ, உடும்பு வேண்டாம், கையை விட்டால் போது" மென்ற நிலைமைக்குத் தற்போது ஹிந்தி எதிர்ப்பு வீரர்கள் வந்திருக்கிறார்கள்.

* * *

ஹிந்தி எதிர்ப்பை ஆரம்பித்தாகிவிட்டது; அதில் தோல்வியடைந்து வீடு திரும்புவதென்றால் மானக்கேடு மீசை முளைத்த ஆண் பிள்ளைகளே! உங்கள் ஹிந்தி எதிர்ப்பு எங்கே, உங்கள் வீரம் எங்கே? ஆர்ப்பாட்டம் எங்கே யென்று தமிழர் கைகொட்டிச் சிரிப்பார்கள். ஹிந்தி எதிர்ப்பு என்று, இரண்டொரு மூலைகளில் கூட்டம் போட்டு, ஒரு சிலர் பட்டினி கிடந்து, சத்தியாக்கிரகம் ஆரம்பித்து ஆர்ப்பாட்டஞ் செய்துவிட்டால் காங்கிரஸ் மந்திரிகள் பயந்து வழிக்கு வந்து விடுவார்கள்; ஜெயம்பெற்று விடலாமென்று ஹிந்தி எதிர்ப்பாளர் ஆதியில் நினைத்தார்கள். ஐயோ பாவம்! பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது! காங்கிரஸ் மந்திரிகளோ விட்டுக் கொடுப்பவர்கள். அதிலும் ஆச்சாரியாரா பணிந்து வருகிறவர். ஒரு சில அதிருப்திகாரருக்கு விட்டுக் கொடுப்பதென்றால், அதிலும் மோசமான நிலைமை வேறில்லை யென்று பகிரங்கமாகத் தெரிவித்து விட்டார்.

* * *

சென்னைக் கடற்கரையில் கூடிய பிரமாண்டமான கூட்டத்தில் அவருடைய உறுதியை இன்னமும் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார். ஹிந்தி எதிர்ப்புக்கு எவ்வளவு ஆதரவிருக்கிறதென்பதை சென்னைக் கடற்கரைக் கூட்டம் நன்றாக நிரூபித்துவிட்டது! ஹிந்தியை ஆதரித்தும், ஆச்சாரியார் பேசுவதைக் கேட்கவும் பல ஆயிரக்கணக்கான சென்னை மக்கள் திரண்டுவிட்டனர். அந்தப் பிரமாண்டமான கூட்டமொன்றே காங்கிரஸ் மந்திரிகளுக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்பதை நன்கு எடுத்துக் காட்டியது. இந்தக் கூட்டத்தை ஹிந்தி எதிர்ப்பாளர் கண்டால், வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். என்றாலும், ரோஷமற்ற சில ஹிந்தி எதிர்ப்பு வீரர்கள் கருப்புக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றார்கள். ஆனால், இதர மக்களைப் போல் சும்மா இருந்து மரியாதையுடன் கூட்டத்தில் பேசுவதைக் கவனித்தார்களா? மக்களாக இருந்தாலல்லவோ அந்தப் புத்தி வரும்? அவர்கள் இயற்கை குணம் அங்கு தலை காட்டிவிட்டது. நின்னைத்தூங்கிகளைப்போல்கூட்டத்தில் மண்ணை வாரி இறைத்துக் கூச்சல் போட ஆரம்பித்தார்கள். கூட்டம் கலைந்ததா? இல்லை. அந்தக் காலிகளே ஓட்டமெடுத்தார்கள். ஹிந்தி எதிர்ப்பு, சில காலிகளின் வம்பு என்பதற்குச் சென்னைக் கடற்கரையில் நடந்த சம்பவம் சரியான உதாரணம். ஹிந்தி எதிர்ப்பின் வேகம் இவ்வளவுதான்; காலித்தனத்தோடு நின்றுவிடும்.

* * *

சென்னைக் கூட்டத்தில் குழப்பம் செய்ய முயற்சித்த காலாடிகளை ஆச்சாரியார் நினைத்திருந்தால் நசுக்கியிருக்க முடியும். ஆனால், அதை அவர் விரும்பவில்லை. ஹிந்தி எதிர்ப்பு எப்பேர்ப்பட்டது, ஹிந்தி எதிர்ப்பாளர் யார்; என்னதன்மையுடையவர்கள்; அவர்கள் யோக்யதை என்னவென்பதைப் பொது ஜனங்களுக்குப் பகிரங்கமாக எடுத்துக் காட்டவே அவர்களை மடக்காமல் விட்டுவைத்தார். அவர்கள் யோக்யதையைக் கூட்டத்திலுள்ளவர்கள் நன்கு தெரிந்தபின் போலீசார் வந்து அவர்களை வெருட்டியடித்தனர். இதுதான் ஹிந்தி எதிர்ப்புக்குத் தமிழ் மக்களிடையே இருக்கும் ஆதரவு!!

* * *

ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் ஒரு சிறிதளவாவது சாதிக்க முடியாதாவென அவர்கள் குட்டிக்கரணம் போட்டுப் பார்க்கிறார்கள். இம்மியும் அசையக் காணோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

கலியாண புடவைகள்

கலியாண காலத்திற்கேற்ற புதுமாதிரியான விலை உயர்ந்த ரகங்களில் பஞ்சாப் சரிகை சேலைகளும், பனாஸ் சரிகை கொடி, டைமன் கட், பூந்தொட்டி சேலைகளும் பெங்களூர் சரிகை, சாதா சேலைகளும், நூதன கலர்களில் வர வழைத்திருக்கிறோம். இவைகள் பார்வைக்கு அழகாயும், அதிக உறுதியாயுமிருக்கும். இதை நேரில பரீட்சித்தால் திருப்திபடைவீர்களென்பது திண்ணம்.

என். சி. பாலுசாமி அய்யர் அன் சன்,
84, நயினியப்ப நாய்க்கன் தெரு,
பார்க்டவுன் மதராஸ்.

சங்க நாதம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்குக் கடுகளவு ஆதரவு கூட இல்லை. திருடனைத் தேள் கொட்டியமாதிரி பே பேயென்று விழித்துக் கொண்டிருக்கிறார்கள். மானம் போகாமல் தப்பித்துக் கொண்டால் போதும்; அதற்காவது வழி இருக்கிறதாவென மெதுவாக வால்விட்டுப் பார்த்தனர். ஹிந்தி எதிர்ப்பை விட்டுவிட இப்போது ஒருயோசனை போடுகிறார்கள். அந்த யோசனைதான் விசித்திரமானது!

* * *

ஹிந்திப் பரீட்சையில் தேறினாலும், தேறவிட்டாலும் மாணவரின் மற்றப் பரீட்சையை ஹிந்திப்பரீட்சை பாதிக்காதென முதன் மந்திரி ஏற்கனவே கூறியிருக்கிறார். அதாவது, மாணவர் ஹிந்திப் பரீட்சையில் தேறவேண்டும் என்பது கட்டாயமில்லை. தாய் பாஷையாகிய தமிழில் கட்டாயம் தேறவேண்டும். மாணவர் ஹிந்திப் பரீட்சையில் தேறவேண்டுமென்று அவசியமில்லாவிட்டால், அவர்கள் ஹிந்தி வகுப்புக்கு ஏன் வரவேண்டும்? ஹிந்தி வகுப்புக்கு மாணவர் வரவேண்டிய அவசியமில்லை என்று சர்க்கார் உத்தரவு போட்டுவிட்டால், அதனால் எந்தவிதமான கெடுதியுமில்லை. ஹிந்தி எதிர்ப்பு வீரர்கள் கூட அதற்கு ஒப்புக்கொண்டு, ஹிந்தி எதிர்ப்பை நிறுத்திவிடத் தயார் என்று ஒரு சில ஹிந்தி எதிர்ப்பாளர் யோசனை சொல்லுகிறார்கள். ஹிந்தி எதிர்ப்பாளர் தப்பித்துக்கொள்ளுவதற்கு இது ஒரு தந்திரம்.

* * *

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஹிந்தி எதிர்ப்பாளர் போடும் கூச்சல் வெறும் கூச்சலென்பது தெரியவில்லையா? தமிழ்த்தாய்க்கு ஆபத்து என்றதெல்லாம் வெறும் பித்தலாட்டம். இது தமிழ் பக்தர்களை ஏமாற்றச் செய்த வெறும் சூழ்ச்சி! ஆனால், ஹிந்தி எதிர்ப்பாளரின் இந்தச் சிறு கோரிக்கையைக் கூட காங்கிரஸ் மந்திரிகள் ஒப்புக்கொள்ள இசையக் கூடாது. கொஞ்சம் விட்டுக் கொடுத்தால், ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகிவிடும். இனிமேல் கண்டதெற்கெல்லாம் சர்க்காரை எதிர்த்து போய்க் கூத்தாட ஆரம்பித்து விடுவார்கள். காங்கிரஸ் மந்திரிகள் கொஞ்சமும் விட்டுக்கொடுக்கக்கூடாது.

* * *

இந்த ஒரு கைப்பிடியளவு உள்ளவர்களின் எதிர்ப்பைத் தமிழர் லட்சியஞ் செய்யக்கூடாது. ஆனால் அவர்களின் அக்கிரமமான ஆர்ப்பாட்டங்களை அவ்வப்போது தட்டி மடக்கவேண்டியது அவசியம். ஹிந்தியை எல்லோரும் ஆதரிப்பதோடு, ஆங்காங்கு பெரிய கூட்டங்கள் போட்டு, அவர்கள் ஆதரவைக் காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் ஹிந்தி எதிர்ப்பாளருக்கு அணுவளவாவது விட்டுக் கொடுக்க எண்ணினால், தமிழ் மக்கள் எல்லோரும் காங்கிரஸ் மந்திரி சபையைத் தண்டிக்கத் தயாராக இருக்க வேண்டும். அவசியமானால், காங்கிரஸ் மந்திரிகளை எதிர்த்து சத்தியாக்கிரகஞ் செய்யவும் சித்தமாக இருக்கவேண்டும்.

* * *

இந்த ஹிந்தி எதிர்ப்பில் மாஜிமந்திரிகளும், "பினமி"களும் சேர்ந்து கொண்டு தில்லாலே பாடுவதுதான் பெரிய வேடிக்கை! மாஜி மந்திரி பூத்தையா முதலியாருக்கும், சா கிருஷ்ண நாயருக்கும் வந்த தமிழ் பக்தி என்ன? "பினமி" மந்திரி சர் கே. வி. ரெட்டி நாயுடுகாருக்கு வந்த அக்கரை என்ன? சர். நாயர் மலையாளி; அவருக்குத் தமிழ் அறவே தெரியாது சர். ரெட்டிகாரு தெலுங்கர்; தமிழில் "அ" என்ற அச்சரங்கூட அவருக்குத் தெரியாது. அச்சரந்தெரியாத இந்த போலிகள் தமிழுக்கு ஆபத்து என்று ஹிந்தி எதிர்ப்பாளருடன் சேர்ந்து கொண்டு ஏன் ஒப்பாரி வைக்கவேண்டும்? இதிலிருந்து இவர்கள் நோக்கம் காங்கிரஸையும், காங்கிரஸ் மந்திரிகளையும் எதிர்ப்பதே என்பது தெரியவில்லையா? ஹிந்தி எதிர்ப்பு தமிழுக்காக அல்ல; காங்கிரஸ் மந்திரிகளை எதிர்க்கவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தென்பது வெள்ளை. இந்த சர்களும், சில சாஸ்திரிகளும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் மரியாதை. இல்லாவிட்டால், அவர்கள் குட்டு வெளியாகி, உள்ள மரியாதையும் போய் விடும்.

* * *

ஹிந்தி எதிர்ப்பு வீராதி வீரர், சூராதி சூரர், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் வஞ்சகந்தான் முழு மோசம். அவர் இந்த எதிர்ப்பை மூட்டி விட்டுத் தமிழரை வஞ்சிப்பதையும், மாசற்ற தமிழ் இளைஞர் உள்ளத்தைப் பாழ்ப் படுத்துவதையும் எந்த உண்மைத் தமிழனும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஒன்றுமறியாத சில இளைஞர் ஹிந்தி எதிர்ப்பு என்னமோ சாக்ஷாத் தமிழ்த் தொண்டு என்று எண்ணிக் கொண்டு, சென்னைக்குவந்து, பலகஷ்டங்களுக்குள்ளாகி, வீடு திரும்பவும் வழியின்றி, சென்னை வீதிகளில் தவித்துக் கொண்டிருக்கும்காட்சி பரிதாபகரமானது. இது தமிழர் உள்ளத்தை அப்படியே கொதிக்கச் செய்யும் இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் காரண கர்த்தராக இருக்கும் சுயமரியாதைப்பிரம்மாவுக்குப் போக வரக் கார், தங்கியிருக்க சொகுசான பங்களா. அவருக்கு ஒரு முறை கார் கொடுத்து உதவவில்லையென்று திருவாரூரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், செட்டி நாட்டுக் குமார ராஜாவைப் பகிரங்கமாகத் தூற்றியிருக்கிறார். இதைவிட இழிகுணம் வேறு வேண்டுமா? ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் அற்பத்தனமான போக்குக்கு வேறு என்ன சான்று வேண்டும்? சென்னை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வேறு இடத்துக்குப் போவதற்கு 3½ ரூபாய் செலவாகிறதென்றால், நாயக்கர் ஏன் அந்த இடத்துக்கு நடந்து போகக்கூடாது? 3½ ரூபாய் கொடுக்கக் கருமித்தனஞ் செய்து, ஒருவரிடம் காரை இரவல் கேட்பதும், அவர் இரவல் கொடுக்காவிட்டால் ஒட்டாதக் கூட்டத்தில் இழிவாகப் பேசுவதும் பெருந் தன்மைபடைத்த ஒருவருக்கு அழகாகுமா? இது அற்பர் செய்யும் வேலை. ராமசாமிப் பெரியார், எவ்வளவு சிறியார் என்பதற்கு இது ஒரு சாம்பில். இது போகட்டும்; செட்டி நாட்டுக் குமார ராஜா அவருக்குக் கார் கொடுத்து உதவாததால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் பொறுப்பில்லாமலிருக்கிறார்களென்று பழி சுமத்துகிறார். இதைப் பார்க்கும்போது சீக்கிரம் ஜெயிலுக்குப் போய்விட்டால்கூட தேவலை என்று தியாகி வேஷம் போடுகிறார் ஜெயிலுக்குப்போய் என்னசெய்ய? அவர் காங்கிரஸிலிருந்தபோது அந்தத் தைரியமிருந்தது. அந்தத் தைரியத்தைக்கொண்டு சிவில் ஜெயிலுக்குப் போகக்கூடத் துணிந்திருந்தார். ஆனால், சுயமரியாதை, ஹிந்தி எதிர்ப்புக்காக அவர் சிறை செல்லத் தயாராக இல்லை. அதற்குரிய தைரியமும் இப்போது இல்லை. அப்படியே தைரியம் வந்தாலும், அவரை காங்கிரஸ் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை. ஏன் தெரியுமா? அது தண்டச் சோறு சோற்றுக்கும் வீண் செலவு, பணத்துக்குப் பஞ்சப்பாட்டுப் பாடும் காங்கிரஸ் மந்திரிகள், ராமசாமி நாயக்கர் போன்றவர்களைக் கைது செய்து, சிறையில் வைத்துத் தண்டச் சோறு போடத் தயாராக இல்லை.

* * *

ஹிந்தியால் தமிழ் பாழாய்ப்போகுமென்று ராமசாமி நாயக்கர் சிஷ்யர் கூச்சல் போடுகிறார்கள். அவரோ ஹிந்தியால் தமிழ் கெடாது என்று சொல்லுகிறார். ஏனெனில், இன்றைய நிலைமையில் 100க்கு 40 வீதம் சுத்தமான தமிழ் இல்லையாம்! ஆங்கிலம், வட மொழிகள் தமிழில் கலந்து விட்டதாம். இந்த ஆங்கிலத்தைதான் அவர் இந்தியாவுக்குப் பொது பாஷையாக இருக்கவேண்டுமென்று கோருகிறார். ஹிந்தியால் தமிழுக்கு ஆபத்தில்லை என்றால் அதை ஏன் எதிர்க்கவேண்டும்? வீணாக எதிர்ப்பது பைத்தியக்காரத்தனமல்லவா? அடுத்தாற்போல், ராமசாமியார் முதன் மந்திரி ஆச்சாரியாரைக் கிண்டல் செய்கிறார். ஆச்சாரியாருக்குத் தொடர்ந்தாற்போல் 10 நிமிஷம் சுத்தமான தமிழ் பேச முடியாதாம் "கொடுப்பாங்க" என்பதற்குக் "குடுக்குவாங்க" என்றுதான் பேசுவாராம். நாயக்கர் தமிழ் ரொம்ப அழகு! "மயில் அழகா, குயில் அழகா, அந்த மாட்டுப் புழுத்தான் என்ன அழகா? என்றதாம் காகம். நாயக்கர் தெலுங்குத் தமிழைவிட ஆச்சாரியார் தமிழ் ஆயிரம் மடங்குமேல் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். நாயக்கர் அதைத் தமிழருக்குத் தெளிவாக்க வேண்டிய அவசியமே இல்லை. சந்தர்ப்பம் கண்டு, கட்சி மாறி, சாதுர்யமாகக் காலங் கடத்திக்கொண்டு திரியும் ஈ. வே. ராமசாமி நாயக்கரைத் தமிழ்நாடு நன்கறியும். தவளை தன் வாயால் கெடுவது போல், நாயக்கரும் அவர் வாயால் கெட்டழிந்து போகாமல், தமிழ் நாட்டிலிருந்தே ஒதுங்கி விடுவது அவருக்கு நல்லது; தமிழ் நாட்டுக்கும் நல்லது!

அமெரிக்காவில் மழை இல்லாமல் பலவிடங்களில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. விவசாயிகள், பல பத்திரிகைகளுக்கு விளம்பரஞ்செய்து கடவுளை சீக்கிரம் மழை பெய்யப் பிரார்த்திக்க வேண்டுமென பொது ஜனங்களைக்கேட்டுக் கொண்டார்கள். இந்த விளம்பரம் பத்திரிகைகளில் வெளியான இரு தினங்களில் நல்ல மழை பெய்தது.

"ஹேர் ரோடின்"

வைத்திய சாஸ்த்திர முறைப்படி மூலிகைகளினுல் தயார் செய்யப்பட்ட சிறந்த கூந்தல் தைலம். அகால நரை, சொட்டை, தலை பொடுகை இவைகளை போக்கி அடர்ந்த கூந்தலை வளரச் செய்யும்.

கர்னுடிக் கெமிகல் ஒர்க்ஸ்
116, ராமசாமி தெரு, மதுரஸ்.

லாபம்

அறிவு

சுகம் பெற

தேவைக்கு எழுதவும்

	ரூ.	அ.
பகவத்கீதை வசனம்	1	8
ஞான சூரியோதயம்	1	0
விவேகானந்தர் சரித்திரம்	4	0
மோக்ஷசாதன ரகசியம்	4	0
சச்சிதானந்த சிவம்	1	2
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திர உபதேசங்கள்	1	12
இன்ப வாழ்க்கை இரகசியங்கள்	2	0
குடும்ப விநோதக் கதைகள்	2	0
ஆங்கில ஆசான்	2	0
ஆனந்தஆங்கிலபாஷாபோதினி	2	0
கொக்கோகம்	2	0
முத்தத்தின் மர்மம்	1	8
காமகலா ரகசியம்	2	0

இன்னும் அநேக புத்தகங்களும் பலவித பவுண்டன் பேனுக்களும் நீடித்துழைக்கக் கூடிய நல்ல கெடியாரங்களும் கிடைக்கும்.

மந்தார் & கோ,
மவுண்ட் ரோடு, P. O. சென்னை.



கவர்ன்மெண்ட், ரயில்வே, பாங்கு, கோவாபரேடிவ் சொஸைடி, வியாபாரிகளுக்கும் சப்ளையர்கள்

சென்னையா கம்பெனி
இரும்புப்பெட்டி வியாபாரம்
137, பிராட்வே, மதுரஸ்

ஹிட்லர் வருகிறார்!

யுத்தத்துக்குத் தயார் - ரகசிய ஏற்பாடுகள்

ஹிட்லர் யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டுவருகிறார். அவர் போட்டிருந்த ரகசிய திட்டங்களெல்லாம் நிறைவேறி வருகின்றன. முதலில் அவர் சர்வதேச சங்கத்திலிருந்து விலகினார்; ரைன்லந்தைக் கைப்பற்றினார். அப்புறம் ஆஸ்திரியாவை விழுங்கி ஏப்பமிட்டார். இப்பொழுது ஜெக்கோஸ்லோவகியாவை விழுங்க முயற்சிக்கிறார். ஜெக்கோவை விழுங்குமுன் அவர் ஹங்கேரியை விழுங்கி விடுவாரெனத் தெரிகிறது. இவ்வாறு படிப்படியாய் ஹிட்லர் யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டு வருவதைக் கண்டு வல்லரசுகள் வாலை மடக்கிக்கொண்டிருப்பதுதான் ஆச்சரியமாகயிருக்கிறது!

ஜெர்மனியை முதல் தரமான வல்லரசு நாடாக்க, அந்தரங்கத்தில் வேலை செய்யும் ஹிட்லர்.

ஹிட்லர் போட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார். இதிலிருந்து அவர் யுத்தத்துக்குத் தயாராகிவிட்டாரென்றே தெரிகிறது. பால்டிக் சமுத்திரத்திலிருந்து, கருங்கடல் வரையிலும், கருங்கடலிலிருந்து மத்தியதரக் கடல் வரையிலும் ஜெர்மன் தேசத்தை விஸ்தரிக்கவேண்டுமென்பது அவருடைய அந்தரங்க நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றியே தீருவாரென அவர் போக்கிலிருந்து தெரிகிறது. ஆண்மையில்லாத ஐரோப்பிய வல்லரசுகள், ஹிட்லரை எதிர்த்து நிற்கத் துணியாமல் வீட்டினுள்ளிருந்துகொண்டு முணுமுணுத்துக்கொண்டிருக்கும் வரையில் ஹிட்லர் அவருடைய காரியத்தைச் சாதித்துக்கொண்டேபோவார். ஜெக்கோவைக் கைப்பற்றுமுன் ஹிட்லர் ஹங்கேரியைக் கைப்பற்ற எண்ணியிருக்கிறார். ஏனெனில், ஹங்கேரிதான் ஜெர்மனிக்கு இப்போது அவசியம். உணவுப் பொருளுக்கு ஹங்கேரி ஒரு களஞ்சியம் போன்றது. அடுத்த யுத்தம் வந்தால், ஹங்கேரியின் உணவுப் பொருள் ஜெர்மனிக்கு உபயோகமாக இருக்கும். மேலும், ஹங்கேரியைப் பிடித்துக்கொண்டால், ஜெக்கோவைப் பிடிப்பது சுலபம்.

அடுத்த யுத்தம்

அடுத்த யுத்தத்துக்கு ஹிட்லர் தயாராகிவிட்டார். ஆதியிலேயே ஜெர்மனி ஏராளமான நீர் மூழ்கிக் கப்பல்களைக் கட்டிவந்தது எல்லோருக்கும் தெரியும். ஜெர்மனி கட்டிவந்த நீர் மூழ்கிக் கப்பல்களும் கொஞ்சமல்ல. அடுத்த யுத்தத்தை எதிர்பார்த்து ஜெர்மனியர் ஏராளமான நீர் மூழ்கிக் கப்பல்களைக் கட்டிவைத்திருக்கிறார்கள். அடுத்த யுத்தம் அநேகமாக ஆகாயத்தில் தான் நடக்குமென்று எல்லா தேசங்களும் யுத்த விமானங்களைக் கட்டி வந்தன. ஆகாயத்தில் யுத்தம் நடப்பதைப்போல் சமுத்திரங்களுக்குக் கீழேயும் கடுமையான யுத்தம் நடப்பது நிச்சயம். கடற்படை யுத்தங்களின் முடிவை நீர் மூழ்கிக் கப்பல்கள் நிர்ணயிக்குமென்று ஜெர்மனியர் கூறுகிறார்கள். விமானப்படையில் ரஷியாவே பலம்பொருந்தியிருப்பது பகிரங்க ரகசியம். ரஷியாவைப் போல் ஜெர்மனியும் விமானப்படையில் பலம் பொருந்தி இருப்பதாக ஜெர்மனிக்குச் சென்று நேரில் விசாரித்தறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஜெர்மனியில் ஏராளமான விமானங்களிருந்தபோதிலும், அவை ரஷியா விமானங்களைப் போல் அவ்வளவு உபயோகமானதல்ல. இதர தேசவிமானங்களை விட ஜெர்மன் விமானங்கள் சக்தியில் குறைந்ததுதான் என்பது அவர்கள் அபிப்ராயம். இதை யாரும் உண்மையாகக் கருதிவிட முடியாது. யுத்தம் வந்தால் தான் உண்மை தெரியும்.



விமானப் பயிற்சி பெறும் இளைஞர்கள். இவர்களுக்குப் பெரும்பாலும், காடுகளிலேயே பயிற்சி கொடுத்து வருகின்றனர். இவ்வித இளைஞர்கள் ஜெர்மனியில் லக்ஷக்கணக்காக இருக்கிறார்களெனத் தெரிகிறது.

இந்தியாமீது பாய்ச்சல்!

ஸ்பெய்ன் கலகத் தலைவர் பிராங்கோவுக்கு ஹிட்லர் உதவிச் செய்து வருவது சுயநல நோக்கத்துடன்தான். கலகக்காரர் ஜெயித்து விட்டால், ஸ்பெய்ன் அநேகமாக, ஜெர்மன், இதாலி ஆட்சிக்குள்ளாகும். ஸ்பெய்ன் கடற் கரையோரங்களில் ஏராளமான யுத்தக் கப்பல்களையும், ஆயிரக்கணக்கான நீர்மூழ்கிக் கப்பல்களையும் வைத்துக்கொள்ள ஹிட்லர் யோசனைபோட்டிருக்கிறார். அங்கு பலமான கடற்படை வைத்துக்கொண்டு மத்தியதரக் கடலைப் பயமுறுத்துவார்; பிரஞ்சு, பிரிட்டிஷ் போக்கு வரத்தைத் தடுக்க எண்ணியே ஹிட்லரும், முஸோலினியும் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மத்தியதரக் கடல் வழியாக வட ஆப்ரிக்காவுக்குப் பிரஞ்சு போக்கு வரத்து உண்டு. அதே மத்திய தரக்கடல் வழியாகவே, பிரிட்டன், எகிப்து, இந்தியா முதலிய இடங்களுக்குப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இதை அடியோடு வெட்டிவிட வேண்டுமென்பது ஹிட்லர் எண்ணம். ஹிட்லருக்கு இந்தியாமீது கண் இருந்துகொண்டிருக்கிறது உண்மை. இன்று இல்லாவிட்டாலும், இனிமேலாவது அவர் இந்தியாமீது பாய முயற்சிப்பது உண்மைதானென்று பேர் பெற்ற அரசியல் நிபுணராகிய ஆர்தர் எதர்ட்டன் கூறுகிறார்.

அனுகூலங்கள்

ஹிட்லர் அவருடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருவதற்கு நல்ல அனுகூலங்களிருக்கின்றன. ஹிட்லரைத் தட்டிக் கேட்க ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஆண்மையில்லை. அபிசீனியாமீது

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்னை
பாரகான் டாக்கீஸில்
விரைவில் வெளிவரும்
"பக்த மீரா"
இத்துடன்
ஷோக் சுந்தரம்
கிராமத்துக்குப் போகிறான்
என்னும் ஹாஸ்யப் படம்
சிந்தாமணி பிக்சர்ஸார்
தயாரித்த உன்னத படம்.

ஹிட்லர் வருகிறார்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

படையெடுத்துச் சென்ற முஸோலினி, கஷ்டத்துக்குள் சிக்கியிருக்கிறார். ஹிட்லர் திடீரென ஆஸ்திரியாவைப் பிடித்தது, முஸோலினிக்குச் சரியான அடி. அவர் செல்வாக்குக் குறைந்துவிட்டது. சென்ற மகா யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது ஜெர்மானியர் அதிக பலம் பெற்று விளங்குகிறார்கள். அவர்களிடம் ஏராளமான யுத்த தளவாடங்களிருக்கின்றன. இழந்த கீர்த்தியை மீண்டும் பெற்றுவிட வேண்டுமென சகல ஜெர்மானியரும் உறுதிகொண்டிருக்கிறார்கள். எப்படியும் யுத்தஞ் செய்தே தீரவேண்டுமெனச் சுமார் 8 கோடி ஜெர்மானியர் நல்ல ராணுவப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஜெர்மனி நினைத்தால் நொடிப்பொழுதில் 8 கோடிப்பேர்களடங்கிய ராணுவத்தைத் திரட்ட முடியும். ஏராளமான மெஷின் பீரங்கிகளும் ஜெர்மனியிடம் தயாராக இருக்கின்றன. பெரிய விமானப் படையும் இருக்கிறது. விமானப் பயிற்சி கற்றுக்கொடுக்க சுமார் 106 பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களிலிருந்து மூன்று மாதத்துக்கு ஒருமுறை சுமார் 19,000 விமானிகள் நல்ல பயிற்சி பெற்று வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். சில வருடங்களில் எத்தனை விமானிகள் பயிற்சி பெற்று வெளிவருவார்களென்பதை இதிலிருந்து கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். ஜெர்மனி இந்த வேகத்தில் செல்லுமேயானால், அது ருஷியாவையும் தோற்கடித்து விடும் போலும்! இவ்வாறு ஜெர்மனி யுத்தத்துக்குத் தயாராக இருந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாவில் ஜெர்மனியே முதல் தரமான தேசமாக இருக்கவேண்டுமென்பது ஹிட்லர் எண்ணம். அதற்காக அவர் வேலை செய்து வருகிறார்; அதில் வெற்றியடைந்து விட்டார். ஐரோப்பா இன்று ஹிட்லருக்கு நடுங்கிக் கொண்டிருக்கிறது. ஒன்று ஹிட்லரைத் தட்டி மடக்க வேண்டும். இன்றேல், ஒரு பெரிய யுத்தத்துக்குத் தயாராகவேண்டும். ஹிட்லரைக் கெஞ்சக் கெஞ்ச அவர் ஆகாயத்தில் துள்ளுகிறார். ஜெக்கோ விஷயத்தில் ஜெர்மனி பிரவேசிக்கக் கூடாதென்று இதர வல்லரசுகள் பயமுறுத்தியும், ஹிட்லர் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ஜெக்கோவில் ஓயாத தொல்லைகள் உண்டுபண்ணி வருகிறார். ஹங்கேரியில் ஒரு கிளர்ச்சியுமில்லை. ஜெக்கோவில் கிளர்ச்சியை உண்டுபண்ணி, எல்லோர் கவனமும் ஜெக்கோவிலிருக்கும்போது, ஹங்கேரியை விழுங்கிவிட ஹிட்லர் எண்ணிக் கொண்டிருக்கிறாரா? அப்படித்தான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.



இந்தியாமீது ஹிட்லருக்கு எப்போதும் கண்ணிருந்து கொண்டிருக்கிறது. ஹிட்லர் போட்டிருக்கும் திட்டம் ஐரோப்பாவில் வெற்றிபெறுமேயானால், இந்தியாமீது ஹிட்லர் பாய்வது நிச்சயம்.

‘டான்ஸிலிட்’ செய்யும் அற்புதமான குணத்தைப் பற்றி

சோயம்புத்தூர் டாக்கீஸ் கம்பெனியின் பங்காளிகளில் ஒருவரான
ஸ்ரீ. எல். கே. கோவிந்த ராஜுலு
எமக்கு எழுதியிருப்பதாவது:—
டாக்டர். எம். சி. குழந்தைசாமி, “டான்ஸிலிட்” நிபுணர்,
ஆலன் கிளினிக், ராயப்பேட்டை மதராஸ்.

அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு,

எங்கள் கம்பெனியில் நடித்து வந்த ஒரு பிரபல நடிகைக்குத் தொண்டையில் சதை வளர்ந்து, அடிக்கடி தொண்டையில் கடுமையான வலி ஏற்பட்டதோடு, அவருடைய குரலும் கம்மி வந்தது. அவருக்கு வேறு எந்த விதமான மருந்தும் குணங் காட்டவில்லை. “டான்ஸிலிட்” மருந்தையே கொடுத்து வரும்படி சில நண்பர்கள் யோசனை சொன்னதின் பேரில், “டான்ஸிலிட்” மருந்தையே கொடுத்து வந்தோம் அது அற்புதமான குணம் கொடுத்தது ஒரு பில்மில் அவர் எடுத்து வந்த பார்ட்டை அதி சீக்கிரத்தில் வெற்றிகரமாக முடித்து, எங்களுக்குப் பரம திருப்தியளித்தார்.

விவரங்களுக்கு:
ஆலன்கிளினிக் இராயப்பேட்டை (ஆஸ்பத்திரிக்கு அருகில்) மதறாஸ்.

இந்திரா ப்ராசஸ் ஸ்டுடியோ
லைன், ஆப்டோன், ஸ்டிரியோ, கலர் பிளாக்குகள்.
3/27, பிராட்வே மதராஸ்.

RAMABANAM STORES

502, தங்கசாலை தெரு, பி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.
Rg. No. 2836
ராமபாணம்
டாம் டாம்
டானிக்
வயிற்று சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட அவுஷதம்.

சென்னை ராயல் தியேட்டரில்

:: ராஜபக்தி ::

17-6-38 வெள்ளி மாலை 5-30க்கு	18-6-38 சனி இரவு 9-30க்கு

19-6-38 ஞாயிறு மாலை 5-30க்கு
ஏசுநாதர்

மதுரை தேவி பாலவிநோத சங்கீத சபா
நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் புரொப்ரைட்டர்.



உலகமெங்கும் பல அதிசயங்கள் நடக்கின்றன. மலேயா நாட்டில்கூட எத்தனையோ அற்புதங்கள் நடப்பதாக ஜான்கார் லெத் கூறுகிறார். அவர் நேரில் கண்ட பல அதிசயங்களைப்பற்றி எழுதியிருப்பது எவருக்கும் ஆச்சரியமாகவிருக்கும்.

கண் சிமிட்டும் மீன்

"ஒரு மீன் மரத்திலேறி இருந்துகொண்டு என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிற்று" என்று நான் சொன்னால் அது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், அது பொய்யென்று நினைக்கவேண்டாம். முற்றிலும் மெய், நான் மலேயாவிலிருந்தபோது ஒரு நாள் சிங்கப்பூருக்கு அருகாமையிலுள்ள காட்டில் நடந்து சென்றேன். ஒரு சிறு குளத்தருகே வந்ததும், அவ்விடம் மரங்களடர்ந்து வசீகரமாய் காணப்பட்டபடியால் இளைப்பாறும் பொருட்டு அங்குள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்தேன். கொஞ்ச நேரஞ் சென்றபின், குளத்திலிருந்து ஒரு மீன் கரைக்கு வந்தது. அது அங்குள்ள ஒரு மரத்தை நோக்கி சென்றது. நான் ஆச்சரியமடைந்து அந்தமீனை உற்று கவனித்தேன். மரத்தை அடைந்ததும் அது மரத்திலேறியது. சிறிதுநேரம் மரத்திலிருந்தது மீண்டும் கீழே இறங்கியது. தண்ணீரை நோக்கி சிறிது தூரம் நடந்து சென்று, மறுபடியும் மரத்திலேறிக்கொண்டு என்னைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிற்று. இந்த மீனைக் கண்டதும் எனக்குப் பெரும் ஆச்சரியமாக விருந்தது. ஆகவே, இந்த மீனைபபற்றி விசாரித்தேன். சிங்கப்பூர் மீன் கடையில் ஒரு சீனக்காரன் இந்த இனத்தைச் சேர்ந்த 6 மீன்களை ஒரு கூண்டில் அடைத்து வளர்த்து வரக்கண்டேன். சிறிது நேரத்திற்கொரு தடவை இந்த மீன்கள் கூண்டிலிருந்த சொற்ப ஜலத்தில் உடலை நனைத்துக் கொள்கின்றன. மறு நிமிஷத்தில் கூண்டின்மேல் ஏறிக்கொள்ளுகின்றன. மலேயாவில் அதிசயிக்கத்தக்க மீன் இது ஒன்றுதான் என நினைத்துவிட வேண்டாம். இன்னும் வேடிக்கையான வேறு ஒரு ஜாதி மீனையும் பார்த்தேன். வயலில் ஒரு பையன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். அவன் பிடித்தவற்றை இனம் வாரியாக பிரித்தபோது, ஏதோ ஒன்றைக் கண்டு சந்தோஷமாகக் கூச்சலிட்டான். அந்த மீனைக் கையிலெடுத்து, தரையில் தேய்த்தான். உடனே அந்த மீன் காற்றை உட்கொள்ள ஆரம்பித்தது. வெகு சீக்கிரத்தில் அதன் உடல் பெருத்து, ஒரு பெரிய "புட்பால்" பந்துபோல் உருண்டையாக மாறிவிட்டது தரையில் அடித்தான். பந்துபோல் மேலே கிளம்பிற்று. இவ்வண்ணம் கொஞ்ச நேரம் விளையாடியபின் அம்மீனை மீண்டும் தண்ணீரில் போட்டு விட்டான். மீனும்குடித்த காற்றை வெளியே கக்கிவிட்டு, சாவதானமாகத் தண்ணீரில் நீந்திச் சென்று மறைந்தது.

சிலந்தித் திருட்டு

பொமுடா என்ற விடத்தில் தங்கியிருந்தேன் நான் தங்கியிருந்த வீட்டிற் கருகில் ஒரு ஹோட்டலிருந்தது. அங்கு கழற்றி வைக்கப்படும் செருப்புகள் சில தினங்களில் காணப்படுவதில்லை யார் திருடுகிறார்களென்பதும் தெரியவில்லை ஒரு நாள் அமெரிக்கப் பண்டிட் ஒருவர் அந்த ஹோட்டலில் தங்கினர் அவர் திருடனைக் கண்டு பிடிக்க இரவு முழுவதும் விழித்திருந்து கவனித்தார். காலை 4 மணி சுமாருக்கு ஒருவித சப்தம் உண்டாயிற்று செருப்புகளை வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். வியப்படைந்தார். மிகப் பெரிய சிலந்திப்பூச்சி யொன்று, செருப்புகளைக் கெளவித் தூக்கிக் கொண்டு போவதைக் கண்டார். இந்த சிலந்தி, சிறு பறவைகளைகூடப் பிடித்துத் தின்று விடுமாம்!

செடியின் அறிவு

ஒரு வனத்தில் கூடாரம அடித்து தங்கியிருந்தேன். அவ்விடத்திற்குச் சமீபத்தில் அழகான புஷ்பம் ஒன்று மலர்ந்திருந்தது சிங்கப்பூர் காட்சி சாலையில் வைக்க உபயோகமாகுமெனக் கருதி, கத்தியால் நறுக்க அருகிற் சென்றேன். செடியில் என் கைபட்டதுதான் தாமதம், உடனே மலர் குவிந்து மூடிக் கொண்டது. கிளைகள் அடித்தண்டுடன் சேர்ந்து ஒட்டிக் கொண்டன. செடி பூராவும் தரையில் படுத்துக் கொண்டது. நான் விலகி நின்று கொண்டு இருந்தேன். சிறிது நேரஞ் சென்றபின், அந்த செடி உயர எழுந்து, கிளைகளை விரித்து மீண்டும் உஷாராக நின்றது. நான் என் வாயால் காற்றை ஊதினேன். இயற்கைக் காற்றுக்கும், செயற்கைக் காற்றிற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்த அந்த செடி, மறுபடியும் தரையில் படுத்துக் கொண்டது இந்நேரத்தில் ஒரு மாடு வேறொரு செடியின் கிளையொன்றைக் கடித்தது. உடனே அங்கிருந்த செடிகள்யாவும் தரையிற் படுத்துக் கொண்டன.

அற்புத திராட்சை

சில மலாய் கூலிகளுடன் ஒரு காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் தாகமாயிருக்கிறதென்று சொன்னேன். கொஞ்ச தூரத்திலிருந்த மரமொன்றில் திராக்ஷைக் கொடி படர்ந்திருந்தது. என்னுடன் வந்தவர்களுள் ஒருவன் அத்திராக்ஷைக் கொடியிலிருந்து ஒரு பாகத்தைக் கத்தரித்துக் கொண்டு வந்து கொடுத்தான். அதில் நீர் நிரம்பியிருந்தது. வெகு தெளிவான, ருசிகரமான நீராக விருந்தது. நானும் அவ்வித கிளையொன்றை கத்தியால் நறுக்கிப் பார்த்தேன். தண்ணீரைக் காணவில்லை. எனது பூட்ஸ் சத்தத்தைக் கேட்டு, அந்தச் செடி தண்ணீரை மறைத்து விட்டதாக என்னுடன் வந்த மலேயர் கூறினார்கள்.

வாலறுந்த பல்லி

ஒரு பணக்கார தோட்டக்காரர் என்னை விருந்துக் கழைத்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, மஞ்சள் நிறமுடைய சிறிய பல்லியொன்று மேஜைமீது விழுந்தது. உடனே என் கைக் குட்டையால் அதை மூடி வைத்தேன். கீழே விழுந்த அதிர்ச்சியால் பல்லி துடிதுடித்துக் கொண்டிருந்தது. பிறகு நின்று விட்டது. கைக் குட்டையைப் எடுத்துப் பார்த்தான். வால் மாத்திரம் இருந்தது. பல்லியைக் காணவில்லை. இதைப் பார்த்திருந்த எனது விருந்தாளி பல்லி என்னை ஏமாற்றி விட்டதென்றும், அதைக் கவனிக்காமலிருக்கும் பொருட்டு, அந்த பல்லி வாலை விட்டுச் சென்றதாகவும் கூறி மேலே பார்க்கும்படி சொன்னார். பல பல்லிகள் ஈக்களை வேட்டையாடிக் கொண்டிருந்தன. அவற்றுடன் வாலறுந்த பல்லியுமிருந்தது.

ஜீவானந்த ரஸாயனம்

உடம்பிலுள்ள கொதிப்பு, மேகக் கொதிப்பு, உஷ்ணம் முதலியவைகளை நீக்கி, தேகத்தில் குளிர்ச்சியை யுண்டுபண்ணும். சரீரத்தின் இயல்பு தெரியாமல் அஸ்தப்பிரயோகம், பரத்தையர் சேர்க்கை, மிதமிஞ்சிய இன்பம் அனுபவித்தல் ஆகிய இவற்றால் ஏற்படும் மூத்திரச் சூடு, சிறு நீர் நிறமாற்றம், மூத்திரம் இறங்கும்பொழுதுண்டாகும் எரிச்சல், மூத்திரத்தோடு இந்திரியம் விழுதல், பலஹீனம், அடிக்கடி சொட்டு மூத்திரம் போதல் முதலிய சிறு நீர் சம்பந்தமான சகல வெட்டை வியாதிகளையும் ஜீவானந்த ரஸாயனம் குணப்படுத்துவதில் நிகரற்றது.

2 சேர் புட்டி 1-க்கு ரூ. 3-8-0. 1 சேர் புட்டி 1-க்கு ரூ. 2-0-0.
பூர்ண குணத்திற்கு 2 சேர் போதும். (தபால் செலவு வேறு)

எங்களிடம் பல நோய்களுக்கும் கைகண்ட மருந்து உண்டு.
விவரங்களுக்கு "சிற்றின்பசாகரம்" இனமாக அனுப்பப்படும்.
மலையாள வைத்திய நிலையம், தபால் பெட்டி நெ. 53, மதராஸ்.
நெ. 11 ஓல்டு ஜெயில் தெரு (ராயபுரம் ஆஸ்பத்திரி எதிரில்) (T. M.)

ஆப்த நண்பன்

அறியாமையினால் கெட்ட பழக்கங்களை அப்பியாஸித்து அல்லல் படும் காலத்தில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

இழந்த சக்தியை இன்பசாகரத்தை யளிப்பதில் ஆப்த நண்பனாக வேலை செய்கின்றன. மேலும், மலச்சிக்கல், தேக அசதி, நரம்புகளின் தளர்ச்சி, மூத்திர சம்பந்தமான வியாதிகளை கண்டிப்பதில் நிகரற்றவை. இலட்சக்கணக்கான ஜனங்கள் உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை யடைந்திருக்கிறார்கள்.

32 மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0
இனம்! கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

MARK TRADE
Registered.

உங்கள் குழந்தைகளே உங்கள் ஆஸ்தி
கக்குவா னுக்கு
ஸ்டாக்ஸ்:—கக்குவா இருமல்
மருந்தே கைகண்டது
8 நாளில் கட்டாயம் சுகமாகும்
ஆஸ்துமா
அல்லது
இழுப்பு இருமலுக்கு
ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஒளஷதம்
எங்கும் கிடைக்கும்
ஜி. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி,
21, எர்ரபாலு செட்டி வீதி, மதராஸ்.

GULL BAHAR HAIR OIL

FOR HAIR GROWTH & BRAIN
OBTAINABLE EVERYWHERE

இனும்! * இனும்!

1 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு, குல்பஹார் ஹேர் ஆயில் சாம்பில் புட்டி 1, விலை ஜாபிதா ஒரு அழகான காலண்டர் இலவசமாக அனுப்பப்படும்.

—: தயாரிப்பவர்கள் :—

தாஜ்முல் ஹுசெய்ன்
வாசனைத் திரவிய வியாபாரி
எலிஸ்ரோடு, மவுண்ட்ரோடு, மதராஸ்

நாவிற்கு ருசி —
தேகத்திற்கு சத்து

விவரப் புத்தகம் இனும்

சமையலை எப்போழுதும்
ருக்மணி
குக்கர்

அடுக்கில் செய்து கொண்டால் சாப்பாட்டில் முழு சத்து நிற்பதுடன் வெகு ருசியும் ஏற்படும். எழு அளவும் ரூ. 9 முதல் ரூ. 38 வரை விலை.

முக்கிய ஊர்களில் ஏஜெண்டுகள் உண்டு.

ருக்மணி குக்கர் கம்பெனி
14, பிடாக்கு மாதாகோவில் வீதி,
ராயபுரம், சென்னை.

நூதனமான கெடியாரம்

இக் கெடியாரம் எமது கம்பெனிக்காக பிரத்தியேகமாய் தயாரிக்கப் பட்டது இதனுடைய மேல் பீரோ முதலியவை ஒருவித புதிய லோகத்தால் செய்யப்பட்டு அழகான பாலிஷுடன் கூடியது. சரியான நேரம் காண்பிக்கக் கூடியது. இதை ஆபீசுகளிலும், வீடுகளிலும், சுவற்றில் மாட்ட வெகு அலங்காரமாய்த்தோன்றும். மேலேயுள்ள படத்தின்படி இல்லாவிடில் கிரையம் வாபீஸ் செய்யப்படும். 3 வருஷத்துக்கு உத்திரவாதம்.

விலை ரூ. 3-0-0

வி. எஸ். வாச் கம்பெனி,
நெ. 2. முதனப்பன் வீதி, ஜி. டி. மதறாஸ்

பூச்சிகள் யுத்தகோஷம்
வெட்டுக்கிளி படையெடுப்பு
பெண்களுக்குள் மூக்குச் சண்டை

நாடு பிடிக்கும் ஆசையும், பிற நாடுகளைக் கொள்ளையடிக்கும் ஆவலும மனிதருக்குத்தான் உண்டென நினைத்து விடவேண்டாம். இந்த விசித்திர உலகில் பூச்சி புழுக்கள் முதல மிருகங்கள் வரைக்கும் இந்த ஆசை இருந்து கொண்டுதானிருக்கிறது. இல்லாவிட்டால் திடீரென ஒரு நகரத்தின் மீதோ, அல்லது கிராமத்தின்மீதோ, மிருகங்களோ பூச்சிகளோ கோடிக்கணக்காகப் பட்டாளங்களைப்போல் படையெடுத்துச் செல்லவேண்டிய அவசியமே இல்லை. படை பட்டாளமாகக் குரங்குகள் படையெடுத்துச் செல்லுகின்றன. எறும்புகள் கூட பெரும் பட்டாளமாகக் காடுகள் மீது படையெடுத்துச் சென்று சிங்கம், யானை போன்ற பராக்கிரமம் பொருந்திய மிருகங்களை வெருட்டித் துரத்துகின்றன. இதெல்லாம் அவ்வளவு வேடிக்கையல்ல. சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் கிப்ஸ்லாண்டு பிரதேசத்தைச் சார்ந்த பின்னர் என்னும் நகர்மீது பல கோடிக்கணக்கான கம்பளிப பூச்சிகள் யத்தஞ்செய்யப் புறப்பட்டன. வீதியெங்கும் இந்தக் கம்பளிப் பூச்சிகள்தான். மனிதரோ மிருகங்களோ வீதியில் நடந்துபோக முடியாது. போக்குவரத்துக்களெல்லாம் தடைபட்டுப் போயின. நகரமெங்கும் இந்தக் கம்பளிப் பூச்சிகள் படையெடுத்து வருவதைக் கேள்விப்பட்டதும் பெரும் திகில் ஏற்பட்டது. இப் பூச்சிகள பல வீடுகளினுள் நுழைந்து, அங்குள்ளவர்களை அங்கு குடியிருக்க விடாமல் வெளியில் துரத்தின. ஆனால், ஒருவா சரியான தந்திரஞ் செய்தார். யுத்த காலத்தில் அரண்கள் வெட்டி சண்டைசெய்கிறார்களல்லவா? அது போல் அவரும் கம்பளிப் பூச்சிகளை ஜெயிக்க அவருடைய வீட்டைச் சுற்றிலும் அரண் தோண்டி அதில் தண்ணீரை நிறப்பி யுத்தத்திற்குத் தயாரானர். இவர் வீட்டை நோக்கி பெரும் படைகளாகத் திரண்டு சென்ற கம்பளிப் பூச்சிகள் அணையையும், தண்ணீரையும் கண்டதும திரும்பிவிட்டன. இந்தக் கம்பளிப் பூச்சிகளுக்கு எந்த இடத்தை முற்றுகை செய்யவேண்டுமென்பது கூட நன்கு தெரியும் போலும்! ஆகவே இவை அதிகஜனநடமாட்டமுள்ள பேசும் சினிமா கொட்டகைகளைத் தேடிப் புறப்பட்டன அங்கு ஜனங்கள் இந்தப் பூச்சிப் பட்டாளத்தைக் கண்டு ஓட்டமெடுத்தார்கள். சினிமாவில் வேலை செய்த ஆட்கள் உடனே தகுந்த ஆயுதங்களைக் கொண்டு, அதாவது துடப்பைக் கட்டைகளைத் தயாராக எடுத்துக்கொண்டு வாசலில் நின்றுகள். இந்தக் கம்பளிப் பூச்சிகள் வாசலை நோக்கி ஊர்ந்து வந்து கொண்டிருந்ததை அப்படியே துடப்பைக் கட்டைகளால் பெருக்கித் துரத் தள்ளினர்கள்.

வெட்டுக்கிளி அட்டகாசம்

பூச்சிகளுக்காவது மண்ணாசையாவது! இது வெறும் கட்டுக கதை; அவைகளுக்கு யுத்தமென்பது இன்னதென்று தெரியாதே என நினைக்கலாம். ஆஸ்திரேலியாவில் கம்பளிப் பூச்சிகள் படையெடுத்துச் சென்றதைபோல் தென்னாப்பிரிக்காவில் ஜோஹன்பர்க்கில்மற்றொரு சம்பவம் நடந்தது அங்கு கோடிக் கணக்கான வெட்டுக் கிளிகள் செய்த அட்டகாசங்களுக்கு அளவில்லை. ஆகாயத்திலிருந்து மழை பெய்தது போல, வெட்டுக் கிளிகள் மட மடவென ஆகாயத்திலிருந்து பூமிக்குப் பறந்து வந்தன. வீதியில் சென்றவர்களும், வீட்டினுள் இருந்தவர்களும் ஆகாசத்திலிருந்து வெடி குண்டுகள் விழுந்தால் எப்படிப் பயப்படுவார்களோ அப்படி பயந்து ஓ வென அலறிக்கொண்டு ஓட்டமெடுத்தார்கள். ஓடுகிறவர்களை உபத்திரவஞ் செய்யக் கூடாதென்ற யுத்த தர்மத்தை இந்த வெட்டுக்கிளிகள் அறியுமா? அவைகள் ஆடைகளைப் பற்றிக் கொண்டது. பல பெண்கள் ஆடைகளை உதறிக் கொண்டே ஓட்டமெடுத்து சில வீடுகளினுள் சென்று சரண்புகுந்தார்கள். அந்த நகரமெங்கும் இந்த வெட்டுக்கிளிகள் செய்த அட்டகாசங்கள் சொல்லி முடியாது இந்நேரத்தில் தெய்வம் ஜோஹன்பார்க் நகர வாசிகளுக்கு உதவிக்கு வந்ததுபோல் திடீரென பெரும் மழை பெய்தது. இந்தமழைசகலவெட்டுக்கிளிகளையும் அடித்துக் கொண்டு போயிற்று. வெட்டுக் கிளிகள் ஜலத்தில் மாண்டன. மறுநாள் அங்குள்ள நீக்ரோவர்களுக்கு நல்ல ஆகாரமாயிற்று. இறந்து குவிந்து கிடந்த வெட்டுக் கிளிகளை அவர்கள் கூடை கூடைகளாக வாரி எடுத்துக் கொண்டு போய் வறுகல் செய்து திருப்தியாகச் சாப்பிட்டார்கள்.

மூக்குச் சண்டை

முகத்துக்கு அழகு மூக்கு மூக்கு தட்டையாகவோ, அன்றி அகன்று குறுகியோ இருந்தால் அழகெல்லாம் பறந்துவிடும். இந்த முக்கிய அம்சத்தை அழகில் விருப்பமுள்ளவர்கள் அறிவார்கள். அமெரிக்காவில் சிக்காகோ நகரிலுள்ள இரு பெண்கள் ஒரு மோட்டார் ப[...] ஸில் போய்க் கொண்டிருந்தார்க[...] இவர்கள் இருவரும் அந்த நக[...] அழகுக்குப் பேர் பெற்றவர்[...] ஆதலால் ஒருவருக்கொரு[...] பொறாமை கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பெயர் மை[...] லடுரெட் பொடிச். மற்றப் பெ[...] பெயர் இடா ஷிங்கில். பஸ்[...]ல் போய்க்கொண்டிருந்தபோதே இவர்களுக்குள் அழகுப் போட்டிச் சண்டை ஏற்பட்டது. வாய்ச் சண்டைதான் மைல்டுரெட்டின் அழகை இடாஷிங்கில் பழித்தாள். அவள் மூக்குத் தட்டையாகவும் விகாரமாகவுமிருப்பதாகக் கூறினாள். அவ்வளவுதான்! மைல்டு ரெட்டிற்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. இடாஷிங்கிலைப் பழிக்குப் பழிவாங்க எண்ணித் திடீரென இடாமீது பாய்ந்து அவள் மூக்கைக் கடித்தாள். இடாஷிங்கில் அழகும் போய்விட்டது. அவள் மைல்டு ரெட்மீ[...] கோர்ட்டில் வழக்குத் தொட[...] தாள். வழக்குத் தொடர்ந்து நஷ்[...] ஈடு பெற்று விடுவதால் இழந்த [...] கைப் பெற்றுவிட முடியுமா?

75 வருஷங்களுக்கு மேலாக எங்கும் புகழுடன்
இந்திய குடும்பங்களின் இணையற்ற சஞ்சீவியென
தினம் லக்ஷக்கணக்கான குடும்பங்களில் உபயோகிக்கும்

Sign of Quality

ASAFOETIDA

மேலான A மார்க்
பெருங்காயம்

போஜன சுசத்தையும், உடல் நலத்தையும கெடுக்கிற போலிப் பெருங்காயங்களில் ஏமாறாமல், வாங்குவதற்கு முன் A மார்க்குத்தானு என்று பார்த்து வாங்கவும.

A மார்க்கு என்றால் அதற்கு இணை வேறேதுமில்லை.

A மார்க்கை வாங்கினுல் ஏமாற்றுவதற்கு இடமில்லை.

1, ½, ¼ பவுண்டு பாக்கிங்கில்
பவுண்டு ரூ. 1—1—0

1 சேர் அழகான டின்
விலை ரூ. 1—0—0

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்
கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.

பலவீனத்தைப் பறக்கடித்து,

உடல் நலத்தையும்
தாது விருத்தியையும் தருவது
சி. எம். சாமி
மன்மத குளிகை என்பதை அறியுங்கள்.

இது தூர்ச்செய்கைகளின் பலனால் ஏற்பட்ட பலவீனம், போகசக்திக் குறைவு, இவைகளை நிவர்த்தித்து, தளர்ந்த நரம்பை முறுக்கேற்றி மன உற்சாகம், வீரிய விருத்தி முதலியவை களைக் கொடுக்கும்.

20 குளிகை விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

1 மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.
2 டி பிராஞ்சு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3 இம்பீரியல் பின்மென் அண்டு ஸ்டோர்ஸ்,
107, தாம்ஸன் தெரு, ரங்கூன், (கிழக்கு)

கைத்தறி ஆடைகளையே ஆதரியுங்கள்

இந்தியர் மூலதனத்தால்
இந்தியர் உழைப்பால்
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
கைத்தறி சுதேசி ஆடைகளையே உபயோகியுங்கள்.

எங்களிடம் ஆந்திராவிலும், தமிழ் நாட்டிலும் தயாராகும் அசல் கதர்களும், சுதேசி ஜவுளிகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

விவரங்களுக்கு:—**என். கருப்பண்ண முதலியார்**
53, கிடங்கு தெரு, மதராஸ்.

தலைமை ஆபீஸ்:-ஈரோடு. பிராஞ்சு: திண்டுக்கல்.

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்
ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும்; சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணா 4.
5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும்.
மானேஜர், "தமிழ்மணி"

ஸ்தாபிதம். 1914 டெலிபோன் நெம்பர் 2224

புராதின இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேச முதலியார்.



உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனிசாமான்கள் இதர மிஷினெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59. பிராட்வே மதராஸ்.

டிரேட்மார்க்குகள் பெயர்கள் லேபில்களை
கல்கத்தா ரிஜிஸ்டர்
AGENTS ஜி.ஏ. ஒர்க்ஸ்
செய்ய 6. பந்தர் தெருவு மதராஸ்.

தயாராகிறது!

செருகளத்தூர் சாமா
விசலூர் சுப்பிரமணிய பாகவதர்
எம். ஆர். லக்ஷ்மீநாராயண பாகவதர்
எஸ். எஸ். மணி பாகவதர், சி. எஸ். தன்சிங்
ஆர். கே. ராமசாமி, என். திருவேங்கடம்,
பி. ஆர். சீனிவாசன்

தயாராகிறது!

எம். ஆர். வாசவாம்பாள்
எம். என். விஜயாள்
எம். கே. ருக்மணி
டி. எஸ். சுபத்திரா
எம். ஆர். கனகரத்தினம்
எம். ஆர். ராமலக்ஷ்மி

கிருஷ்ணன் தூது
&
நவீன தெனாலி ராமன்

என். எஸ். கிருஷ்ணன்
ஜாலி கிட்டு
டி. எஸ். துரை ராஜ்

தஞ்சிதபாதம் பிள்ளை

டி. எஸ். கமலம்
டி. எம். ராஜம்
டி. வி. அன்னபூரணி

படம்பிடிப்பு: கமால்கோஷ் * டைரெக்ஷன்: ஆர். பிரகாஷ் * ஒலிப்பதிவு: பி. கே. விஸ்வநாத்

ஸ்டுடியோ:—மோஷன் பிக்சர்ஸ் பொரொட்யூசர்ஸ் கம்பைன்ஸ்

விவரங்களுக்கு:—**ராஜகோபால் டாக்கீஸ்,**
("ராம மஹால்")
27, லாயட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.

போன்:-86006. தந்தி:-"தூது"

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
2—8—0
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1-3
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்
திற்கு குறைந்
சந்தாவுக்குப் ப
திரிகை அனுப்ப
பட மாட்டாது.

ஏழை யேன்றும் அடிமை யேன்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரேன்ப திந்தியாவில் இல்லையே,

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மேங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

கண்ணைப் பறிக்கும்
பலவர்ண "பைலட்" மை

PILOT INK

Colours as you like;
Red..........
Jet black......
Sepia.........
Blue black...
Green.........
Cobalt blue...
Violet........

பச்சை, சிவப்பு, வைலட், கருப்பு முதலிய
எந்த நிறத்திலும் மை கிடைக்கும்.

"பைலட்" [illegible] ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்
அதன் அருமை பெருமை தெரியும்.
எல்லா ஸ்டேஷனரி வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

Sole Agents

F. X. Pereira & Sons.,
75, Poonamallee High Road,
MADRAS.

தபால் பெட்டி நெ.
Post Box 1209.

தந்தி விலாசம்:-
Telegrams:-"RELIGART"

சேசுவின் திரு இருதய
அரசாட்சியை
குடும்பங்களில் ஸ்தாபிக்கும்
மாதம் இது!

அழகான சீர்மை பிளாஸ்ற்றர் சுரூபங்களும் பல வர்ணப் படங்களும் அதற்கேற்ற வாடா விளக்குகளும் எங்களிடம் ஏராளமாய் இருக்கிறது.

அழகான இருதயப் படங்களுக்கும், சொரூபங்களுக்கும் ஆர்டர் கொடுங்கள். அல்லது நேரில் வந்து உங்கள் மனதுக்கேற்ற படங்களையும், சொரூபங்களையும் வாங்கிக்கொள்ளுங்கள்

சொரூபங்கள்	8"	12"	16"	20"	24"
ரூ.	3-0-0	4-8-0	9-0-0	12-8-0	20-0-0
பலவர்ணப்படங்கள்	10x8	17x13	20x16	25x19	29x22
	0-2-0	0-5-0	0-9-0	1-0-0	1-8-0

நேர்த்தியான கருப்பு நிறத்தில்	20x16	29x20
ரூ.	1-4-0	2-8-0

வெளியூர் ஆர்டர்கள் விசேஷ சிரத்தையுடன் கவனிக்கப்படும்.
ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள் திருப்தியடைவீர்கள்
"உங்கள் திருப்தியே எங்கள் அனுகூலம்"

THOMAS RODRIGO & SONS,
No. 1, Tucker's Lane,
BROADWAY, G. T. MADRAS.

ஷாக்புரூப் லிவர் கைக்கடிகாரமே
எல்லா வற்றிற்கும் சிறந்தது.



ஏனெனில் எந்தவித தொழிலாளரும் அதை உபயோகப்படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின் எதோ கை தவறுதலாக கீழே விழுந்த போதிலும் கடிகாரத்திற்கு ஒரு விதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை
இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு
கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3-15
ரவுண்டு கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 4-12
சதுர கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 7-8
இனும் லதர் ஸ்டார்ப் தபால் செலவு வேறு.
நாங்கள் சர்தகால விற்பனைக்காக விலைகளை குறைத்திருக்கிறோம். ஆகையினால் இந்த அரிய சந்தர்ப்பத்தை கை விடாதீர்கள்! இன்றே எழுதுங்கள்.
ஹெட் ஆபீஸ்:—ஸ்டார் வாச் கம்பெனி, மூர்மார்க்கட் சென்னை.
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்
பிராஞ்சு:— 563, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி சென்னை.

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" PRESS, 21, Sembudoss St., G.T. MADRAS.